விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 22 வியாழக்கிழமை (08.11.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 324




# அதிக பாதுகாப்புச் செலவுடன் கூடிய வரவு செலவுத்திட்டம் நேற்று சமர்ப்பிப்பு

## அடுத்த ஆண்டுக்கான துண்டு விழும் தொகை 293.44 பில்லியன்

- மொத்த வருமானம் 750.74 பில்லியன் ரூபா
- மொத்தச் செலவீனம் 1044.18 பில்லியன் ரூபா
- துண்டு விழுந்தொகை 293.44 பில்லியன் ரூபா
- பாதுகாப்புச் செலவீனம் 166.4 பில்லியன் ரூபா
- பெற்றோலுக்கு வரிக்குறைப்பு
- பசுக்கொலைக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம்
- வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 2500 ரூபாயாக அதிகரிப்பு
- 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு
- மதுபானம் 35 ரூபாவால் அதிகரிப்பு
- சிகரட் 2 ரூபாவால் அதிகரிப்பு

(கொழும்பு)

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் நிதியமைச்சரும் ஜனாதிபதியுமாகிய மகிந்த ராஜபக்ஷ நேற்று 2008 நிதியாண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தினை நாடாளுமன்றில் சமர்ப்பித்தார். மகிந்த ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் சமர்ப்பிக்கும் மூன்றாவது வரவு செலவுத் திட்டம் இது.

அடுத்த நிதியாண்டிற்கான அரசின் மொத்த உத்தேசவருமானமாக சுமார் 750.74 பில்லியன் ரூபாய்களும் மொத்த உத்தேச செலவீனங்களாக 1044.18 பில்லியன் ரூபாய்களும் காட்டப்பட்டிருப்பதோடு துண்டுவிழும் தொகையாக சுமார் 293.44 பில்லியன் ரூபாய்களாகவும் கணக்கிடப்பட்டிருக்கின்றது.

கடந்த மாதம் அரசு முன்வைத்த நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் படி 2008 ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்பு செலவீனங்களுக்காக 166.44 பில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது 2007 ஆம் ஆண்டிற்கான உத்தேச தேசிய பாதுகாப்பு செலவீனங்களுடன் ஒப்பிடும்போது ஏறத்தாழ 20 சதவீத அதிகரிப்பாகும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# முகமாலை முதல் கிளாலி வரையிலான முன்னரங்கப் பகுதியில் கடும் மோதல்




## சேதவிபரம் குறித்து மாறுபட்ட தகவல்

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

அன்பர்கள், நண்பர்கள், வாசகர்கள் மற்றும் விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக. இந் நன்னாளில் நாட்டில் சாந்தியும் சமாதானமும் ஏற்பட இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


–வலம்புரி குடும்பம்

# சேதவிபரம் குறித்து மாறுபட்ட தகவல்

(யாழ்ப்பாணம்)

முகமாலை முதல் கிளாலி வரையிலான இராணுவ முன்னரங்க பகுதியில் நேற்றுக் காலை இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம் பெற்றுள்ளன. இத்தாக்குதலில் 52 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாக இராணுவமும் 20 படையினர் பலியானதாக விடுதலைப்புலிகளும் அறிவித்துள்ளனர். (10ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...
தீபாவளி
சிறப்பு மலர்



# இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண கைகொடுக்குமாறு ஜனாதிபதி அழைப்பு

தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வினை க்காண்பதற்கு அனைத்து வேறுபாடுகளையும் குறைத்துக் கொண்டு பணியாற்றவேண்டிய நேரம் வந்துள்ளது. எனவே எமது தாய் நாட்டின் நலன் கருதி இந்த பொதுவான நிகழ்ச்சிநிரலை நோக்கி பயணிக்க அரசாங்கத்துடன் கை கொடுத்துக் கொள்ளுமாறு எதிர்க்கட்சியிலுள்ள உங்கள் அனைவரையும் அழைக்கிறேன் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தினை நேற்று சபையில் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். இனப்பிரச்சினை தொடர்பில் இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

அனுபவத்தினை எதிர்நோக்குகின்ற அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடென்ற ரீதியில் தடைகளை தளர்த்துதல் பாதிக்கப்படத்தக்க விதத்தில் எமது புலனாய்வு பணிகளை வெளிப்படுத்தும் எமது பாதுகாப்புப் படைகளின் அவசியத்தினைப் புறக்கணித்து அல்லது அவர்களின் மதியுரைகளை அசட்டை செய்வோமாயின் எமது நாட்டின் ஸ்திரத் தன்மை மீது ஏற்படும் உடனடித் தாக்கத்தினை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. மோசமான தாக்கங்களினதும் அழிவுகளினதும் செலவுகள் வாய்ப்புகளற்ற மற்றும் தியாகங்களுக்கான செலவுகளை விஞ்சிக் காணப்படுவதனை நாம் கண்டிக்கிறோம்.

ஜனநாயகம் மற்றும் மனிதாபிமான பரிசீலனையில் எமது தேசியப் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வொன்றினைக் காண்பதற்கு எமது அனைத்து வேறுபாடுகளையும் குறைத்துக் கொண்டு பணியாற்ற வேண்டிய நேரம் வந்திருக்கிறது.

எமது தாய் நாட்டை காக்கும் பணியிலும் பயங்கரவாதப் (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தி



(கொழும்பு)

தீபாவளித் திருநாளை முன்னிட்டு இலங்கை வாழ் அனைத்து இந்துக் களுக்கும் இந்த வாழ்த் துச் செய்தியை விடுப்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். தீபம் ஏற்றல் பண்டிகை என அழைக்கப்படுகின்ற தீபாவளி தீயவற்றை நீக்கி நன்மையையும் அந்தகாரத் தை நீக்கி ஒளியையும் அறியாமையும் நீக்கி அறி வுடைமையையும் வெற்றி கொள்வதை குறிப்பதாக அமைகின்றது.

தீபாவளிப் பண்டிகை இன, மத, சாதி, வர்க்க வேறுபாடுகளுக்கு அப்பால் எமது மக்கள் அனை வரிடமும் அன்பையும் நல்லுறவையும் பரப்பக் கூடிய ஒன்றிணைக்கும் சக்தியாக இருப்பதால், எமது மக்கள் மத்தியில் சிறந்த புரிந்துணர்வைக் கொண்டுவருவதற்கும் நாட்டில் சமாதானம், நல்லுறவு என்பவற்றை மீளக்கட்டியெழுப்புவதற் குமான எமது முயற்சிகளை இரட்டிப்பாக்குவதற் கான மிகவும் சிறந்ததொரு வாய்ப்பாகும். நல்லெண் ணம் மற்றும் சமாதானத்தின் ஒளி, பயங்கரவாத அந்தகாரத்தை நீக்கி எமது தாயகத்தை ஒளிபெறச் செய்யட்டும் என்பது எனது பிரார்த்தனையாகும். அனைத்து இந்து பக்தர்களுக்கும் எனது மகிழ்ச் சிகரமான தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

# யாழ்.இராணுவத் தளபதியின் வாழ்த்துச் செய்தி

(பலாலி)

இன்று மலரும் தீபாவளியை முன்னிட்டு யாழ்.இந்து மக்களுக்கு வாழ்த்து செய்தியை தெரிவிப்பதற்கு கிடைத்த இந்த சந்தர்ப்பமா னது நான் அடைந்த பாக்கியமாக கருதுகிறேன் என யாழ்.பாதுகாப்பு படைகளின் தளபதி தெரிவித்துள்ளார். தீபாவளி தினத்தை முன் னிட்டு அவர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தி யிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது, உலக வாழ் இந்துக்களுக்கு இந்தநாள் சமய ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் மிக வும் முக்கியமான நாள் என்பதை நான் அறி வேன் . தமது வாழ்வு வளம் பெற வேண்டியும் தேவர்களையும் மனிதர்களையும் துன்புறுத்தி வந்த நரகாசூரனை கண்ண பிரான் அழித்து விடுதலையளித்த நாளையே தீபாவளியாக கொண்டாடுகின்றோம்.

தற்போதைக்கும் விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்தி, அரசாங்க நிர்வாகத்துக்குள் கொண்ட வரப்பட்டிருக்கும் வடக்கு கிழக்கு பிர தேச மக்களுக்கு தீபாவளியை மகிழ்வுடனும் சுமுகமாகவும் கொண்டாடத் தேவையான சூழலை பாதுகாப்பு படையினர் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

அதேபோன்று எதிர்காலத்தில் இலங்கை வாழ் அனைத்து இந்துக்களும் மிகவும் மகிழ்வுடன் தமது உறவுகளோடு இத் தீபாவ ளியை கொண்டாடக் கூடியவாறு சமாதானத் தை ஏற்படுத்துவதே பாதுகாப்பு படையினரின் எதிர்பார்ப்பாக இருப்பதுடன் அதனை கூடிய விரைவில் நிறைவேற்றுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போ மென்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆகவே இன்று யாழ்.குடாநாட்டில் தீபா வளியை கொண்டாடும் உங்கள் அனைவரது எதிர்பார்ப்புக்களும் பிரார்த்தனைகளும் ஈடேற வேண்டுமென்று நாமும் வேண்டுவது டன், உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சிகர மான இனிய தீபாவளியாகட்டும் என்றும் வாழ்த்துகின்றேன். (ச)

# இலங்கைத் தூதரகம் முன்னால் சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம்

## கொளத்தூர் மணி உட்பட பலர் கைது






தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் படுகொலை யை கண்டித்து சென்னையில் உள்ள இலங் கை துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு நேற்று போராட்டம் நடத்த முயற்சித்த பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ. மணி உள்ளிட்ட நூற்றுக்கணக்கான தமிழின உணர்வாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

முற்றுகைப் போராட்டத்தின் தொடக்கத்தில் கொளத்தூர் தா.செ.மணி பேசியதாவது, இலங் கை இராணுவ இலக்குகளையும் பொருளா தார இலக்குகளையும் மட்டுமே தாக்குகிற தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதி கள் என்று சிங்கள அரசு சொல்ல அதனை ஏற்று பல நாடுகள் புலிகளை பயங்கரவாத இயக் கமாக அறிவித்திருக்கின்றன.

ஆனால் பல நாடுகளின் ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்ட அமைதிப் பேச்சில் ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கு எதிராக பள்ளிகள், குடியிருப் புக்கள், வழிபாட்டுத்தலங்கள், வாழ்விடங்கள் மீது குண்டுகளை வீசியும் அப்பாவிப் பொதுமக் களை-செய்தியாளர்களை-நாடாளுமன்ற உறுப்பினர்களை-மாணவர்களை கொன் றொழித்தும் இன்று இறுதியாக அமைதிப் பேச்சுக்கு தலைமையேற்று நடத்தி வந்த அர சியல் பிரிவு தலைவரையே குறிபார்த்து குண்டு வீசிக் கொன்றிருக்கிற அரசே உண்மையான பயங்கரவாதி என்பதைப் புரிந்து கொண்டு சிங்கள அரசுக்கு ஆயுதம் மற்றும் பயிற்சி உள்ளிட்ட எந்த ஒரு உதவிகளையும் இந்திய அரசு செய்யக்கூடாது என்று வலியுறுத்துகி றோம்.

திட்டமிட்டு அழிக்கப்படும் தமிழ் இனத் துக்கு அரணாக நின்று உலக நாடுகளே ஏற் றுக் கொண்டு பிரகடனப்படுத்தியுள்ள சுயநிர் ணய உரிமைக்காகப் போராடும் தமிழீழ விடு தலைப் புலிகள் அமைப்பை விடுதலைப் போ ராட்ட அமைப்பாக அங்கீகரித்து இந்திய அர சுக்கோ இந்திய இறைமைக்கோ எப்போதும் எதிராக செயற்படாத விடுதலைப் புலிகள் மீது தேவையற்று போடப்பட்டிருக்கும் தடையை நீக்க வேண்டும் என்று இந்திய அரசை வலியு றுத்துகிறோம்.

இந்த கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கை யெழுத்து இயக்கம் நடத்த உள்ளோம். போரில் இறந்த போராளிகளைக் கூட அனைத்துலக நெறிமுறைகளுக்கு எதிராக நிர்வாணப் படுத்தி அவமானப்படுத்தியும் தொடர்ந்து இன வெறியுடன் தமிழர்களை கொன்றுவரும் இலங் கை அரசைக் கண்டித்து தூதரகம் மீது முற்று கைப் போராட்டம் நடத்துகிறோம் என்றார்.

இதனைத தொடர்ந்த கொளத்தூர் மணி, தமிழர் தேசிய இயக்கத்தின் பொதுச் செயலா ளர் திருச்சி செளந்தரராஜன், தமிழ்மண் பதிப் பகம் இளவழகன், மார்க்சிய பெரியார் பொது வுடைமைக் கட்சியின் பச்சைமலை, திராவிடர் இயக்க தமிழர் பேரவையின் அன்பு தென்ன ரசு, பெரியார் தி.க.துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், வழக்கறிஞர் துரைசாமி உள்ளிட்ட நூற்றுக்கணக்கான தமிழின உணர்வாளர் கள் கைது செய்யப்பட்டனர். (ச-5)

# தமிழ்ச்செல்வனின் கொலைக்கு அமைச்சர் ஹக்கீம் கண்டனம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைதிப் பேச்சுக் குழுவின் தலைவர் சு.ப.தமிழ்ச்செல் வனை அரசாங்கம் படுகொலை செய்தமைக்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் கண்டனம் தெரிவித் துள்ளார். நாடாளுமன்றில் நேற்று முன் தினம் ரவூக் ஹக்கீம் பேசியதாவது,

தமிழ்ச்செல்வன் மறைவு குறித்த எமது ஆழ்ந்த இரங்கலை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன். இத்தகைய இரங்கலை தெரிவிப்பதன் மூலம் தென்னிலங்கையின் துரோகியாக நான் சித்திரிக்கப்படும் ஆபத்தும் உள்ளது.

அதனைப்பற்றி கவலை கொள்ளவில் லை. தமிழ்ச்செல்வனுடன் தொலைபேசியில் பலமுறை உரையாடியிருக்கின்றேன். உத்தி யோகபூர்வ அமைதிப் பேச்சுக்களின் போது நேரில் சந்தித்திருக்கிறேன்.

அமைதிப்பேச்சுக்களில் பங்கேற்ற அன்ரன் பாலசிங்கம், சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர் இப்போது இல்லை. பேச்சுக்களின் மூலமாக தீர்வு காண்பதற்கு இது ஒரு பின்னடைவு.

தமிழ்ச்செல்வனின் மரணம் குறித்த பார் வையின் மூலம் தமிழ் மற்றும் சிங்களத் தரப் பினர் பிரிந்து நிற்கின்றனர். இதுவே இந்த நாட்டின் இனப்பிரிவினையை வெளிப்படுத்து வதாகும்.

, துடுப்பாட்டத்தில் முத்தையா முரளிதரன் உலக சாதனை செய்கின்றபோதுதான் இரு தரப்பும் மகிழ முடிகிறது என்றார் அவர். (ச-5)

# இராணுவ உதவிகளை நிறுத்த வலியுறுத்தி தமிழகத்தில் கையெழுத்து இயக்கம்

## பெரியார் திராவிடர் கழகம் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கைக்கு இந்திய அரசாங்கம் இராணுவ உதவிகளை வழங்குவதனை நிறுத்த வலியு றுத்தி தமிழ்நாடு முழுவதும் கையெழுத்து இயக்கத்தை பெரியார் திராவிடர் கழகம் தொடங்கியுள்ளது.

சென்னையில் நேற்று முன்தினம் நடை பெற்ற பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள் ளிட்ட போராளிகளின் வீரவணக்க நிகழ்வில் இக்கையெழுத்து இயக்கம் தொடங்கப்படு வதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பெரியார் திராவிடர் கழகத்தின் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி தலைமையில் இந் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 6.00 மணியளவில், சென்னை தியாகராஜர் நகரில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மார்க்சிய பெரியார் பொதுவு டைமைக் கட்சி செயலாளர் வே.ஆனைமுத்து பேசுகையில், இந்தியாவில் நடைபெறும் ஆட்சி கள் எதற்குமே கொள்கையோ இலக்கணங்க ளோ இல்லை .எத்தனையோ பேரணிகள், உண் ணாவிரதப் போராட்டங்களில் இலங்கைக்கு உதவி செய்யாதே என்று இந்திய அரசுக்கு கோரிக்கை வைத்துப் பார்த்துவிட்டோம்.

ஆனால் நம்முடைய குரல் ஓங்கி ஒலித் தால்தான் டில்லிக்காரன் காதில் கொஞ்சமா வது விழும். ஆகையால் கிராமங்கள் தோறும் இதற்கான பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டும். கிராமங்களில் தான் மக்கள் இருக் கிறார்கள். ஒவ்வொரு கிராமமாகச் சென்று நாம் இந்தப் பரப்புரையை மேற்கொள்ள வேண்டும் என்றார். (ச-5)



புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சிவபூமி அறக்கட்டளை நிலையத்தினால் தீபாவளி தினத்துக்கான நிதியுதவி வழங்கும் வைபவம் யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய் பிரிவில் நடைபெற்ற போது பாதிக்கப்பட்ட சிறுவர் ஒருவருக்கு சிவபூமி அறக் கட்டளை நிலைய திருமதி கலைவாணி குகதாசன் வழங்குவதையும் அருகில் வைத்திய சாலை புற்றுநோய் சிகிச்சை பிரிவின் வைத்தியர்கள், பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் ஆகியோர் காணப்படுகின்றனர். (படம்: சுதாகர்)

# பால் உற்பத்தியை மேம்படுத்த அரச அதிபர் தலைமையில் மாநாடு

யாழ்.மாவட்டத்தில் பால் உற்பத்தியையும், விற்பனையையும் மேம்படுத்தும் நோக்கில் அரசாங்க, அதிபர் தலைமையில் கடந்த மாதம் 19 ஆம் திகதி பி.ப.4.00 மணிக்கு அரசாங்க அதிபர் மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையா டல் ஒன்று நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் அரசாங்க அதிபர் க.கணேஷ், திட்டமிடல் பணிப்பாளர் கி.குணாள சிங்கம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உத விப் பணியாளர் டாக்டர் திருமதி வ.அமிர்தலிங் கம், யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டு றவுச் சங்கங்களின் சமாச தலைவர் தா.பக்திநா தர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க உப தலைவர் கோ.சிவசுந்தரமூர்த்தி ஆகி யோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் பால் உற்பத்தியா ளர்கள், பாவனையாளர்களின் நன்மை கரு திப் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

✶ யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் 01.09.2007-ம் திகதியிலிருந்து பால் கொள்வனவு லீற்றருக்க ரூபா.37 ஆக வும், விற்பனை விலை ரூபா 45 ஆகவும் நிர்ண யிக்கப்பட்டுள்ளது.

✶ யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் விரைவில் பொதி செய்து பால் விற் பனைக்கு விடப்படும்.

✶ பாலின் தரம் உறுதிசெய்யப்பட வேண்டும், தரமான பாலை எக்காரணம் கொண்டும் சங் கம் கொள்வனவு செய்யாமல் திருப்பி அனுப் பக்கூடாது.

✶ யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரால் உற்பத்தி செய்யப்படும் கால் நடைத் தீவனத்தில் உள்ளடங்கும் உள்ளீடுக ளின் வீதாசாரங்களும் தர நிர்ணயமும் கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிபார்சுகமைய பேணப்படும். தன்னிச்சையாக எந்தச் சங்கமும் கால்நடைத் தீவனத்தை உற்பத்தி செய்யமுடியாது.

✶ கால்நடைத் தீவன உற்பத்திக்காக விவசாயிகளிடமிருந்து சோளம் கிலோ ரூபா 50 வீதம் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுற வுச் சங்கம் கொள்வனவு செய்யும். (ச)


## ஆனந்தி திருமண சேவை

1977-ல் பிறந்த, நட்புப் பெற்ற உதயச் செவ்வாய், கிரகபாவ சங்கியை 21, ரோகிணி நட்சத்திரம், உயரம் 5' 11". கால சர்ப்பதோஷம், அழகிய சிவந்த அரசுத் தொழில் புரியும் பெண் மணிக்கு உள்ளூர் மற்றும் வெளியூர் மணமக னின் ஜாதகத்துடன் V.A சிவராசா, சோதிடர், 56 அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம், 16.11.2007-ல் நிகழும் வியாழ மாற்றம் உங்க ளுக்கு எப்படி? எல்லா இராசிகளுக்கும் ஒரே புத் தகத்தில் பலாபலன்கள். V.A சிவராசா வெளி யிட்டது என்று கேட்டு வாங்குங்கள். உங்கள் திருமணம் சம்பந்தமாக சிந்திக்கும் வேளையில் சந்தித்துப் பாருங்கள் (536)

## இன்று ஒரு தகவல்

# பொய்

''எனக்குப் பொய்யே பேசத் தெரியாதுசார்'' என்று ஒருவர் என்னிடம் கூறினார். அவருடைய வாழ்நாளில் அவர் சொல்கிற மிகப்பெரிய பொய் அதுதான் என்னும் உண்மை எனக்குத் தெரியும். பொய் பேசுவதை ஒரு கலையாகவே செய்துகொண்டு வருபவர் அவர். பொய்யிலே எத்தனை வகை இருக்கிறது? அது எந்தெந்த இடத்திலே எப்படியெப்படி உபயோகப்படுகிறது என்பதைப் பற்றியெல்லாம் அவர் ஏற்கனவே என்னிடம் விபரமாகச் சொல்லியிருக்கிறார். பொய் சொல்வதில் அவர் நிபுணர்! அதனாலே அவர் சொல்லும் விபரத்தை நாங்களும் தெரிந்து வைத்துக்கொள்வது நல்லது.

முகஸ்துதி என்பது ஒருவகையான பொய். பெரிய மனிஷர்களிடம் போய் காரியம் சாதிக்க வேண்டியிருக்கிறதே! முகஸ்துதி செய்யாமல் என்ன செய்வது? ''உன்னைப் போல வேறு ஒருவர் உண்டா?...'' ஆகா... ஒகோ என்று புகழ ஆரம்பித்துவிடுகிறோம். கர்ணனுடைய மறு அவதாரம் நீங்கள் தான் என்கிறோம். அவரும் அதில் மயங்கி கையிலே கிடைப்பதைக் கொடுத்துவிடுகிறார். ஆனால் எந்த விதமான முகஸ்துதிக்கும் மயங்காதவர்கள்–கஞ்சர்கள் கூட இருக்கிறார்கள். "கொடுக்கிலா தானை பாரிலே என்று கூறினும் கொடுப்பாரில்லை'' என்கிறார் நாயனார் ஒருவர்.

முகஸ்துதியிலே உள்ள ''சைக்காலஜி'' என்ன தெரியுமா? செய்வது முகஸ்துதிதான் என்பது கேட்கிறவர்களுக்கும் தெரியும். ஆனால் மனதுக்கு அதைக் கேட்கும் போது ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. இது மனித இனத்தின் பலவீனம்! அடுத்தவர்களைப் புகழ்வதற்குப் பெயர் முகஸ்துதி தன்னையே புகழ்ந்து கொள்வதற்குப் பெயர் தற் புகழ்ச்சி! இதுவும் ஒருவகையான பொய்தான். எப்படி தெரியுமா? நம்பிடமுள்ள குறைகளை மறைத்து நிறைகளை மிகைப்படுத்திப் பேசுகிறோம். இதனாலே மற்றவர்களுக்கு நம்முடைய உண்மையான சொரூபம் தெரிவதில்லை... மறைத்து விடுகிறோம். இதுவும் பொய் தானே?

சாக்குப் போக்குச் சொல்வதும் பொய்யிலே ஒரு ரகம். பல சமயங்களிலே நமது கடமையை நாம் ஒழுங்காகச் செய்வதில்லை. கொடுத்த வாக்குறுதியையும் மீறி விடுகிறோம். அந்தச் சமயத்திலே நமது தப்பை மறைப்பதற்காகப் பொய் சொல்கிறோம். அதற்கும் பெயர்–சாக்குப் போக்கு!

வீண் பேச்சு என்று சொல்கிறோமே அதுவும் பொய்யிலே ஒரு வகைதான். பொழுது போக வேண்டுமென்பதற்காக இல்லாததையும் பொல்லாததையும் பேசிக்கொண்டிருக்கிறோமே அதிலும் பொய்க்கலப்பு அதிகமாக இருக்கிறது. ''அவதூறு'' என்று சொல்கிறோமல்லவா? அதுவும் ஒரு வகையில் பொய்தானாம். அடுத்தவர் புகழைக் கெடுக்கிற மாதிரி, நிம்மதியைக் குலைக்கிற மாதிரி பேசுகிறோமே–அதற்குப் பெயர்தான் அவதூறு.

"அவன் என்ன சார் பெரிதாகச் சாதித்துவிட்டான்... நான் சாதிக்காத சாதனையா?'' இவ்வாறு பேசுகிறவர்கள் எத்தனை பேர்? பொய்யிலே மிகவும் காத்திரமான ஒரு ரகம் இருக்கிறது. அது தான் பொய்சாட்சி! இது ரொம்ப மோசம்! அடுத்தவர் வாழ்க்கையையே மிகவும் மோசமாகப் பாதிக்கக்கூடியது இது. ஒரு நீதிமன்றத்திலே நின்று நடந்ததை நடக்கவில்லை என்றும் நடக்காததை நடந்தது என்றும் சொல்வது எவ்வளவு பெரிய மோசம்?

யாருக்கும் கெடுதல் இல்லாமல், ஒரு நல்லது நடக்குமென்றால் அதற்காகப் பொய் சொல்லலாம் என்கிறார் திருவள்ளுவர். அந்தப் பொய்–உண்மைக்கும் சமம். ''பொய்மையும் வாய்மை உடைத்து...''

ஒரு வேதாந்தியைப் பார்த்து இந்த உலகத்திலே மிகப் பெரிய பொய் எது? என்று கேட்டார் ஒருவர். "பொய்யான இந்த உடம்புக்கு ''மெய்'' என்று பெயர் வைத்திருக்கிறோமே –அது எவ்வளவு பெரிய பொய் என்றார் அவர்''

''பொய் சொல்லும் வாய்க்கு போசனம் கிடையாது'' என்பது ஒரு பழமொழி. இந்தப் பழமொழியிலே எனக்கு நம்பிக்கையில்லை என்றார் ஒரு குடும்பத் தலைவர். என் மனைவியைப் பார்த்து நீ மிகவும் அழகாக இருக்கிறாய் என்று தினமும் சொல்கிறேன். அதனாலேதான் எனக்கு தினமும் போசனம் கிடைத்துக்கொண்டிருக்கிறது என்று அதற்கு ஒரு விளக்கமும் கொடுத்தார்.

இவரை என்ன சார் செய்வது?

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# தமிழ்ச்செல்வன் மறைவுக்கு கருணாநிதி கவிதை உச்ச நீதிமன்றம் செல்ல ஜெயலலிதா முடிவு



தமிழ்ச்செல்வன் மறைவுக்கு தமிழக அரசு சார்பில் கருணாநிதி இரங்கல் தெரிவித்திருப்பது தேசவிரோத செயல். தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்திற்கு ஆதரவு தெரிவிப்பவர் முதல்வராக நீடிக்க முடியாது இது குறித்து உச்ச நீதிமன்ற செல்வதை தவிர வேறு வழியில்லை என்று அ.தி.மு.க.பொதுச் செயலர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இது குறித்து ஜெயலலிதா நேற்று வெளியிட்ட அறிக்கை, கருணாநிதிக்கு விடு தலைப் புலிகளோடுஉள்ளஅசைக்கமுடியாதபிணைப்பினால் தான் தமிழ்ச் செல்வன் மறைவுக்கு இரங்கல்கவிதை வெளியிட்டுள்ளார். இதற்கு எனது கடுமையான கண்டனத்தை தெரிவித்து, சிறுபான்மை தி.மு.க.அரசைக் கலைக்க வேண்டும் என்று வலியுறுத்தினேன். எனது உடலில் தமிழ் ரத்தம் ஓடுகிறது. அதனால் தான் இவ்வாறு எழுதினேன் என்று கருணாநிதி தனது செயலுக்கு தமிழன் பெயரை இழுக்கிறார். ராஜிவைக் கொன்ற விடுதலைப்புலிகளை வரிந்து கட்டிக் கொண்டு ஆதரிக்கிற கருணா நிதியின் செயல் மன்னிக்க முடியாத குற்றம்.

நான் மைசூரில் பிறந்ததை வைத்து கருணாநிதி இப்படி சொல்கிறார். நான் மைசூரியில் பிறந்தாலும் தமிழ் குடும்பத்தில் தான் பிறந்தேன். எனது தாய்மொழி தமிழ் தான். தமிழ் ரத்தம் தான் என் உடலில் ஓடுகிறது. இலங்கையில் பிறந்தவர்களை தமிழர்கள் என்று ஏற்றுக்கொள்ளும் போது, இந்தியாவின் ஒரு பகுதியான மைசூரில் பிறந்தவரையும் தமிழர் என்று தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். கர்நாடகாவில் பிறந்ததால் கன்னடியர் ஆவது கிடையாது. தமிழகத்தில் பஞ்சாபி, ராஜஸ்தானைச் சேர்ந்தவர்கள் மூன்று தலைமுறையாக வாழ்கின்றனர். அவர்களை தமிழர்கள் என்று சொல்வதில்லை. இலங்கையில் பிறக்கும் தமிழர்களை சிங்களவர்கள் என்று சொல்வதில்லை. இலங்கைத் தமிழர்கள் என்று தான் சொல்கிறோம். கர்நாடகாவில் பிறந்திருந்தாலும் நான் தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த சுத்த தமிழச்சி இலங்கைத் தமிழர்கள் மீது எனக்கும் அ.தி. மு. க.வுக்கும் பரிவு பாசம் உண்டு. இலங்கைத் தமிழர்கள் நல் அமைதியுடன் வாழ வேண்டும்என்பது தான் அனைவரது விருப்பம். கடந்த இரண்டரை ஆண்டுகளாக இலங்கைத் தமிழர்கள் மரணமடைந்தபோது வருத்தம் தெரிவிக்காமல் தமிழ்ச் செல்வன் மரணத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ளார். கருணா நிதி.

நாங்கள் இலங்கைத் தமிழர்களை ஆதரிக்கின்றோம். கருணாநிதி தடைசெய்த புலிகள் அமைப்பை ஆதரிக்கிறார். 'வைக்கோ அறிக்கையை விட்டிருக்கிறாரே' என்று கருணாநிதி கேள்வி கேட்கிறார். வைகோ எந்தவித இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின்படி பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டு முதல்வராகவோ முக்கிய அரசுப் பொறுப்பையோ வகிக்கவில்லை. தமிழ்ச் செல்வனுக்கு இரங்கல் தெரிவித்தது. தேச விரோத செயல் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்திற்கு ஆதரவு தெரிவிப்பவர் முதல்வராக நீடிக்கமுடியாது. இது குறித்து உச்ச நீதிமன்றம் செல் வதைத் தவிர அ.தி.மு.கவுக்கு வேறு வழியில்லை இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-5)

## இலங்கை வங்கிக் கிளைகள் இன்று திறந்திருக்கும்

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இலங்கை வங்கியின் கிளைகள் யாவும் இன்று காலை 8.30 மணி முதல் 12 மணி வரை வாடிக்கையாளர் சேவைகளுக்காக திறந்திருக்கும் என வங்கியின் வடபிராந்திய உதவிப்பொது முகாமையாளர் பீ.ஏ.அருமைநாயகம் தெரிவித்துள்ளார். (6)

## தீபாவளி விசேட பிரார்த்தனை நிகழ்வு

யாழ்ப்பாணம் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு தீபாவளியை முன்னிட்டு விசேட பூஜை தீப ஆராதனை பஜனை அதனை தொடர்ந்து பிரசாதம் வழங்கல் என்பன நடைபெறும்.

## இராசிபலன்

*08.11.2007*
*(ஐப்பசி 22, வியாழக்கிழமை)*
*சதுர்த்தசி பின்னிரவு 02.32 மணிவரை*
*சித்திரை முன்னிரவு 8.12 மணிவரை*
*இராகுகாலம் 01.35-03.05 மணிவரை*
*சுபநேரம் 07.35-09.05 மணிவரை*
*சித்தாமிர்தம்*
*தீபாவளிப் பண்டிகை*

| | |
|---|---|
| மேடம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய அனுகூலம், தெய்வநம்பிக்கை, தனவரவு. |
| இடபம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தேக நலன், சத்துருஜெயம், மனமகிழ்ச்சி. |
| மிதுனம் | உடல்நலக்குறைவு, சிறு வியாதி, செய்தொழில் விருத்தி, குடும்பக் கவலை. |
| கடகம் | மாதாசுகம், சுபநிகழ்வு, வாகன சுகம், மனச்சஞ்சலம். |
| சிங்கம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், சகோதரர் உதவி, பிரயாண நன்மை, தனலாபம். |
| கன்னி | கௌரவக்குறைவு, தனவிரயம், முயற்சி தாமதம், விவாதம். |
| துலாம் | கற்பனை மிகுதி, தொழில்சிந்தை, நண்பர்கள் உதவி, சயனசுகம். |
| விருச்சிகம் | நண்பர்கள் விரோதம், தனவிரயம், சயனசுகக்குறைவு, முயற்சி தாமதம். |
| தனுசு | இஷ்டசித்தி, பெரியோர் உதவி, போசனசுகம், பொருள் சேர்க்கை. |
| மகரம் | நிலைமாற்றம், அதிக பிரயாசை, தனலாபம், மேன்மை. |
| கும்பம் | கட்டுப்பாடு, அச்சமான நிலை, ஆரோக்கியக்குறைவு, உறவினர் சந்திப்பு. |
| மீனம் | திருடர்பயம், காரிய தடங்கல், போசன சுகம், தர்மம். |

வ ள வ ன்

# டெங்கு பரவும் அபாயம் சுகாதார அமைச்சு கவலை

டெங்கு நோய்பாதிப்பு அதிகரித்துள்ளதாக அறிக்கைகள் கிடைத்து வருவதால் நவம்பர் மாதத்தில் டொங்குக் காய்ச்சல் பரவக்கூடிய அபாயம் இருப்பதுபற்றி சுகாதார மற்றும் போஷனை அமைச்சு கவலையடைந்துள்ளது.

அமைச்சின் தொற்றுநோய் பிரிவு பிரதிப்பணிப்பாளர் கலாநிதி பிரபா பாலிகாவத்தன டெங்கு நோய் நாட்டில் கொழும்பு, கம்பகா, கண்டி, மாத்தறை, யாழ்ப்பாணம், குருநாகல், புத்தளம், அநுராதபுரம் மற்றும் கேகாலை மாவட்டம் ஆகிய பகுதிகளில் மிக விரைவாகப் பரவி வருவ தாக கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கையில் டெங்கு நோய் முற்றாக ஒழிக்கபட வில்லையென்றும் சகல மாவட்டங்களிலும் சிறியளவில் காணப்படுவதாகவும் ஆனால் கடந்த இரண்டு மாதங்களில் கொழும்பு உட்பட சில மாவட்டங்களில் அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் உள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக டாக்டர் பாலிலகவத்தன தெரிவித்துள்ளார்.

இவ்வருடம்கொழும்பில்சித்திரை வைகாசி மாதங்களில் 39, 45 டெங்கு நோயாளர்கள் பதியப்பட்ட போதும் புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் இவ்வெண்ணிக்கை 194, 181 ஆக உயர்ந்துள்ளது. கொழும்பு மாநகரசபையினுள் புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் 162, 158 ஆக உயர்ந்துள்ளது என அவர் கூறினார்.

2007 இன் முதற்பத்து மாதங்களில் மொத்தம் 5103 டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட் டுள்ளனர். நோய் பரவல் மாதிரியைப் பார்க்கும் போது வருடத்தின் இறுதி இரண்டு மாதங்களில் டெங்கு இரத்தப்பெருக்கு காய்ச்சலின் பரவல் வேகமாக இருக்கலாம் என அமைச்சு விழிப்புடன் இருக்க வேண்டும் என அவர் விளக்கினார். டெங்குவை கட்டுப்பத்தவும் தடுக்கவும் மிகவும் இலகுவான புத்திமதி என்னவெனில், "நுளம்பு உரு வாகும் இடங்களை அழித்தல்" ஆகும்.

பொதுமக்கள் டெங்குகாவியான நுளம்புகள் உருவாகும் இடங்களை அழிப்பதன் மூலம் தமக்கும், சமுதாயத்திற்கும் உதவலாம் என அவர் கூறினார். நாம் ஒவ்வொரு வருடமும் டெங்கு வின் தாக்கத்தால் பாதிக்கப்பட் டுள்ளோம். 2006 இலும் 2004 இலும் டெங்கு நோய்ப் பரவலால் பல நூற்றுக் கணக் கானவர் மரணமடைந்துள்ளனர். அமைச்சு பல வழிகளிலும் கூடியளவு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள் கின்றது என கலாநிதி பாலிகவத்தன தெரிவித்துள்ளார். (அ-6)



2006ஆம் ஆண்டில் 2 இலட்சம் ரூபாவுக்கான காப் புறுதியினை இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தில் பெற்றிருந்த மணல் ஒழுங்கை, பருத்தித்துறையைச் சேர்ந்த தே.மரியதாஸ் அகாலமரணமடைந்ததையடுத்து அவருடைய இழப்பீட்டுத்தொகையாகிய 3 இலட்சத்து தொண்ணூறாயிரத்து முற்நூற்று எழுபத்தெட்டு ரூபாவிற்கான காசோலையை அவரது தாயாரிடம் இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தின் சிரேஸ்ட காப்புறுதி அமைப் பாளரா கிய பெ. ஜெனியூட் வழங்குவதை படத் தில் காணலாம். அருகில் காப்புறுதி ஆலோசகர்களாகிய கி.செல்வ மோகன், ம.சுமன் ஆகியோர் காணப் படுகின்றனர்.

# தீபாவளி சிறப்பு மலர்-08.11.2007

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## ராசி சில்க்ஸ்

70,71 A நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.
தொ.பேசி.222 5571



## நல்லி சில்க்ஸ்

121/1 ,மின்சார நிலைய வீதி , யாழ்ப்பாணம்.
தொ.பேசி.222 5573

---

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்

## ஆர்.வி.ஜி.பீடி ஸ்தாபனம்

இல.58 நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 6806

## R.V.G மெடிக்கல்ஸ்

ஆங்கில மருந்து வகைகள் ஊட்டச்சத்து, பால்மா வகைகள்
என்பவற்றை நியாய விலையில் பெற்றுக்கொள்ள

இல 504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2129

---

அனைவருக்கும் எமது தீபத் திருநாள் நல் வாழ்த்துக்கள்

## சொலெக்ஸ் பல் மூக்குக் கண்ணாடியகம்



- பிறேம் அற்ற (Rimlees )மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும்
- உங்கள் கண்களைப் பரிசோதித்து கவர்ச்சிகரமான பிறேம்களில் கண்ணாடிகளை பொருத்திப் பெற்றுக் கொள்ளவும்
- பல்சம்பந்தமான சகல ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும்
- சங்குப் பற்களை மிகவும் கவர்ச்சிகரமான முறையில் கட்டிக் கொள்ளவும்
- மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்து சீர் செய்து கொள்ளவும்

## SOLAX OPTICAL & DENTAL

516, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 7631

---

எமது வாடிக்கையாளர்களுக்கு இனிய
தீபாவளி நல் வாழ்த்துக்கள்

## த.குமாரசாமி ரெக்ஸ் ரைல்ஸ்



42,44 பெரிய கடை வீதி , யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 222 2985

---

எமது வாடிக்கையாளர்களுக்கு இனிய தீபாவளி
வாழ்த்துக்கள்

## ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டேர்ஸ்

212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
T.P:222 5542

---

வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது தீபத் திருநாள்
நல் வாழ்த்துக்கள்

## எரிக் கணேஷ்



- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து நவீன ரகக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- இழந்த பற்களுக்கு நிகராக சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்.
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ் போட்டோ கிறேலென்ஸ் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும் நாடுங்கள்.

(கட்டுப் பற்களைச் சுத்தம் செய்யும் மாத்திரை விற்பனைக்குண்டு)

**மூக்குக் கண்ணாடியகமும் பல்கட்டுமிடமும்**

564, 566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 222 2486

கிளை இல 80 கே.கே.எஸ்.வீதி சுன்னாகம்.

---

எமது வாடிக்கையாளர்களுக்கு இனிய தீபாவளி நல்
வாழ்த்துக்கள்

## வானகம் போன் சிற்றி

எம்மிடம் சகலவிதமான போன்களும் உத்தரவாதத்துடன்
திருத்திக்கொடுக்கப்படும் அத்துடன்
Nokia 6030, 6680, N70, N72, N73, N90, N91 Unlock,
S/W install செய்தும் தரப்படும்.



அன்னை நாகா பூட் சிற்றி முன்பாக
T.P: 777 238588

இல.06 கே.கே.எஸ்.வீதி
யாழ்ப்பாணம்.

---

அனைத்து வாடிக்கையாளர்களுக்கு இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

PCP the path to computer paradigm

## Pc Park (Pvt) Ltd

# 633,K.K.S Road, Jaffna.
Telephone: 021 2229581 Fax: 021 2229581 hotline: 0773068998
email: info@pcparkonline.com web: www.pcparkonline.com

---



வாடிக்கையாளர் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## சாரங்கா நகை மாடம்

T.P: 021 222 2480
Fax: 021 222 6972

157/1, Kasthuriar Road,
Jaffna

## சாரங்கன் நகை மாடம்



175/1,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 6059

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்

காகிதாதிகள், எழுதுகருவிகள், உபகரணங்கள் மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

## ஆசீர் வணிக நிலையம்



இல.202A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P / FAX:- 021 222 2842

# தீபாவளி சிறப்பு மலர் - 08.11.2007




வாடிக்கையாளர் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

நம்பிக்கை- நாணயம்- உத்தரவாதம்- 22 கரட் தங்க நகைகளுக்கு

**கிருஷ்ணா நகை மாளிகை**

உயர்ந்த தரம்
சிறந்த வேலைப்பாடு
நவீன டிசைன்களின்
முன்னோடிகள்

இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை நிறுவனம் **கிருஷ்ணா அடகுக் கடை**

இல.370, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 5046

---

எமது வாடிக்கையாளர்களுக்கு இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

JANASHAKTHI

JANASHAKTHI FULL OPTION

**ஜனசக்தி இன்சூரன்ஸ்**

JANASHAKTHI FOR INSURANCE

165/மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 3827, 222 9552

---

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**லைடன் புடைவை நிலையம்**

410 ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

தொ.பே. 021 222 2381

---

எமது இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

சகல விதமான பாடசாலை உபகரணங்கள் மற்றும் அப்பியாசப் புத்தகங்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

இல 04.ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 6693

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்

உலகின் எப்பகுதியிலிருந்தும் அனுப்பும் பணத்தை சில மணி நிமிடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

WESTERN UNION | TRANSFERT D'ARGENT

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**

212. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 2024

---

இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

துவிச்சக்கர வண்டிகள், அவற்றிற்கான உதிரிப்பாகங்கள், T.V டெக் வகைகள், றேடியோ வகைகள், அன்ரனா வகைகள் போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

**இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**

இல.50,52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

E.S.PERAMPALAM AND CO

PEPSI,MIRINDA,7UP
(போன்றவற்றுக்கான ஏக விநியோகஸ்தர்கள்)

தொ.பே.021-222 2988
222 3096, 222 2368

---

அனைவருக்கும் எமது தீபத் திருநாள் நல் வாழ்த்துக்கள்

உங்களது நன்மதிப்புப் பெற்ற பிரீடம் எல். எம்.எல்.ஸ்கூட்டர் மோட்டார் சைக்கிள் விவ சாய உபகரணங்கள் மொத்தமாகவும் சில் லறையாகவும் பெற்றுக்கொள்ள புதிய நிறுவனம்

**எஸ்.பீ.என்.மோட்டர்ஸ்** S.P.N.MOTORS

171,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

---

அனைவருக்கும் உளம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

PEPSI

யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

**கஜமுகன் ஹாட் வெயர்ஸ்**

147,149, STANLEY ROAD,
JAFFNA.

தொ.பே.222 2833, 222 7144

---

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்

சகல விதமான பலசரக்குப் பொருட்களையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள

**றூபா பன்முக வர்த்தகம்**

இல:104 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே.222 2479

---

தீபாவளி நல் வாழ்த்துக்கள்

**சீமாட்டி**
**புடைவைக் கடல்**



சர்வதேச கடன் அட்டைகள் ஏற்கப்படும்



கிளைகள்: மங்கை சில்க்ஸ்

(இல.15, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்).
(இல.122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்).

T.P: 222 2196 , 222 2102

---

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

பலசரக்குப் பொருட்கள், மிக்ஷர் தயாரிப்பிற்கான பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

**ஜெகன் களஞ்சியம்**

இல.285, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# குரு பெயர்ச்சி



## விருச்சிகம்

(சித்திரை 3,4 பாதங்கள், சுவாதி விசாகம்-1,2,3 பாதங்கள்

**16-11-2007 முதல் 30-11-2008 வரை**

(பெயரின் முதல் எழுத்துக்கள் தோ, ந, நி, நே, நோ, ய,யி, யு உள்ளவர்களுக்கும்)

இலாபத்தை இரு மடங்காக்கும் இரண்டாமிடத்து குரு

விதியை மதியால் வெல்லலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் விருச்சிக ராசி நேயர்களே!

இதுவரை உங்கள் ராசியில் சஞ்சரித்து வந்த குரு பகவான் வாக்கு, தனம் குடும்பம் என்று வர்ணிக்கப்படும் குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரித்து எண்ணற்ற இனிய நற்பலன்களை வழங்கப் போகிறார்.

தனாதிபதி தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பணம் பல வழிகளிலும் வந்து உங்கள் பையை நிரப்பப்போகிறது. தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும் தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளுக்கு நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். பெற்றோர்களாலும் மற்றோர்களாலும் உங்களுக்கு பெருமை வந்து சேரும். கற்றவர்களுக்கு மத்தியில் உங்கள் சொல்லுக்கு மதிப்பு அதிகரிக்கும்.

நவம்பர் 16ஆம் திகதி குரு பெயர்ச்சியாவதால் நவம்பர் முதல் உங்களுக்கு நல்ல நேரம் தொடங்கி விட்டது. வி.ஐ.பிக்களின் ஒத் துழைப்போடு வேகமாக முன்னேற்றம் காண் பீர்கள் தேக நலன் சீராகும். செல்வாக்கு மேலோங்கும் புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேர்ந்து பொண்ணான வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கும். தென்முகக் கடவுளை இன்முகத் தோடு வழிபட்டு வந்தால் நன்மைகள் நாள்தோறும் வந்துகொண்டேயிருக்கும்.

**விரைவில் வி.ஐ.பி.யாக மாறுபவர்கள்**

மற்றவர்கள் வி.ஐ.பி.யாக மாற பல சாதனைகளைச் செய்ய வேண்டும். ஆனால் நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் சாதனை நிகழ்த்தி சரித்திரத்தில் இடம்பெறுவதால் விரைவில் வி.ஐ.பியாக மாறிவிடுவீர்கள் மூளை பலமே உங்களுக்கு மூலபலம் என்பதால் கால நேரம் கருதி நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சிகளிலும் கனிவோடு வெற்றி கிடைக்கிறது. எல்லோரும் இன்பமாக வாழ வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு உண்டு. புகழ் மிக்கவர்களின் வரிசையில் முதலிடம் பிடிப்பவர்களும் நீங்கள் தான்.

சிபாரிசு இல்லாமலேயே பெரிய மனிதர்களைப் பார்த்து காரியத்தை முடித்துக்காட்டுவீர்கள். கனவு பலிதமும் வாக்கு பலிதமும் உங்களுக்கு இயற்கையிலேயே உண்டு. அடுத்தவர் நலன் கருதி நீங்கள் எடுக்கும் முயற்சி அத்தனையும் வெற்றி பெறுவதால் தான் உங்களைச் சுற்றி ஒரு பெரும் ரசிகர் கூட்டம் இருக்கும். பேச்சாற்றலால் பிறரை ஆச்சர்யப்பட வைப்பவர்கள் நீங்கள். செவ்வாய் இருக்கும் அமைப்பை ஜாதகத்தில் பார்த்து வாழ்க்கைத் துணையை தேர்ந்து எடுத்தால் தான் இல்லறம் இனிமையாக அமையும்.

உங்கள் ராசிநாதன் செவ்வாய் தைரியக் காரகன் என்று வர்ணிக்கப்படுகிறார். எனவே எதிர்காலம் இனிமையாக அமைய அதன் சார பலம் அறிந்து படிப்பு தொழில் போன்றவற்றை தேர்ந்தெடுத்து கொள்வதோடு அதற்கு நட்பு கிரகத்தின் எண்ணின் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக்கொண்டால் செல்வ விருத்தியும் செல்வாக்கும் பெற்றவராக நீங்கள் மாற முடியும்.

**குரு பார்வையால் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி**

குரு இதுவரை ஜென்மத்தில் சஞ்சரித்து வந்தார். எனவே எவ்வளவு தான் சம்பாதித்தாலும் மன அமைதி ஏற்பட்டிக்காது விரயங்களைக் கட்டுப்படுத்த விதவிதமான வழிகளைக் கையாண்டிருப்பீர்கள். ஆனால் இப்பொழுது அருமையான இடத்தில் குரு வாசம் செய்கிறார். அதன் பார்வை 6,8,10 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே அந்த இடங்கள் புனிதமடைகின்றன. குரு பார்வையால் குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் தீரும் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும்.

**வழக்குகளில் வெற்றி கிட்டும்**

மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறும் நேரமிது. வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். வியக்கும் விதத்தில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும் கடன் சுமை குறைய எடுத்த முயற்சியில் வெற்றிகிடைக்கும். கனிவோடு காரியங்களைச் செய்து வெற்றி காண்பீர்கள். உடல் நலம் சீராகும். இதுவரை எத்தனையோ வைத்தியம் பார்த்தும் நோய் தீரவில்லையே என்று வருத்தப்பட்டவர்கள் இப்பொழுது சாதாரண வைத்தியத்தால் சர்வரோகமும் குணமானது கண்டு ஆச்சரியப்படுவர்.

வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும் வழக்குகளில் தீர்ப்பு உங்கள் பக்கம் என்ற தித்திப்பான செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அயல்நாட்டு அழைப்புகளை ஏற்றுக்கொள்ளலாமா என்று ஆர்வத்தோடு சிந்திப்பர். நல்லவர்களின் ஒத்துழைப்போடு நலம் யாவும் வீடு வரும். கடை திறப்பு விழாக்கள் முதல் கட்டட திறப்பு விழாக்கள் வரை நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும்.

**வழிபாட்டால் வளர்ச்சி கூடும்**

# உங்களுக்கு எப்படி?

இடமாற்றம் ஊர் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள நினைப்பவர்கள் சுய ஜாதகத்தை ஆராய்ந்து செவ்வாய் மற்றும் குருவின் பலமறிந்து அதற்கேற்ற ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து யோக பலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வந்தால் தேக நலனும் சீராகும். செல்வ நிலையும் உயரும் ஆதரவுக் கரம் நீட்டுவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். சாதனையாளராக மாறும் வாய்ப்பும் கிடைக்கும்.

**பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும்**

குருவின் பார்வை 8 ஆம் இடத்தில் பதிவது நன்மை. தான் எண்ணற்ற நல்ல காரியங்களுக்கு பிள்ளையார் சுழி போடுவீர்கள். விரயத்திற்கேற்ற தொகை வந்து கொண்டே இருக்கும் வீட்டிற்கு தேவையான பொருட்களை குறிப்பாக டி.வி. பிரிட்ஜ், கட்டில் மெத்தை அலங்காரப் பொருள்கள் ஆகியவற்றை வாங்கி மகிழ்வீர்கள். சென்ற ஆண்டு நீங்கள் நினைத்த கனவெல்லாம் இப்பொழுது நனவாகப் போகிறது. ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அயல் நாட்டு வணிகத்தில் இருப்பவர்களுக்கு ஆதாயம் அதிகரிக்கும்.

பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றிதரும். பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் தீரும் திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும். மாற்றினத்தவர்களும் வேற்று மொழி பேசுபவர்களும் கூட்டணிகளாவர் .குரு வழிபாடும் விநாயகப் பெருமான் வழிபாடும் செவ்வாயில் முருகன் மற்றும் சக்தி வழிபாடும் புதனில் விஷ்ணு வழிபாடும் அனுமன் வழிபாடும் பிரதோஷத்தில் நந்தி வழிபாடும் பேரும் புகழும் பெற வைக்கும். சரஸ்வதி வழிபாடும் இலட்சியங்கள் அனைத்தையும் நிறைவேற்றி வைக்கும்.லட்சுமி வழிபாடும் செய்வதோடு குல தெய்வ பிரார்த்தனைகளையும் குறிப்பிட்டபடி செய்தால் கேட்ட வரங்கள் கிடைக்கும். தீட்டும் திட்டங்கள் அனைத்தும் நிறைவேறும்.

**தொழில் வளர்ச்சி மேலோங்கும் நேரம்**

தொழில் ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொடர்ந்து புதிய ஒப்பந்தங்கள் வந்துகொண்டே இருக்கும் கலைத் துறையை சார்ந்தவர்கள் உங்களுக்கு கைகொடுத்து உதவுவர். ஒரு தொழில் செய்வோர் இணைத்தொழில் செய்யவும் வரு மானம் பெருக்கவும் வழிபிறக்கும் நேரமிது. தொழில் நடக்கும் இடங்களைக்கூட விலைக்கு வாங்கி சொந்தமாக்கிக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். சொத்துக்களால் இலாபம் கிடைக்கும் நேரமிது.

**மகர குருவால் ஏற்படும் மாற்றம் (23.04.2008 முதல் 4.6.2008) வரை**

தனுசு ராசியில் சஞ்சரித்து வந்த குரு பகவான் ஏப்ரல் மாதம் மகர ராசியில் சஞ்சரிக்கப்போகிறார். அதன் பார்வை உங்கள் ராசிக்கு 7, 19,11 ஆகிய இடங்களில் பதிகிறது எனவே திருமண முயற்சி வெற்றி தரும் கல்யாண கனவுகள் நனவாகும் நீண்ட நாட்களாக வரன் பார்த்தும் சரியாக அமையவில்லையே என்று ஏற்கியவர்கள் இப்பொழுது சந்தோஷ சாம்ராஜ்ஜியத்தில் நுழையப்போகிறார்கள். தந்தை வழியில் பிரியக்கூடும். பாகப் பிரிவினைகள் சுமூகமாக முடியும், அஞ்சல் வழி செய்திகள் ஆச்சரியப்படவைக்கும். குழந்தைகளின் நலன் கருதி ஆபரணங்களை வாங்கிச் சேர்ப்பீர்கள். மாற்றினத்தவரின் ஒத்துழைப்போடு தொழில் வளர்ச்சி மேலோங்கும். பவுர்ணமியன்று கிரிவலம் வந்து மகத்தான தெய்வங்களையும், மனித தெய்வங்களையும் வழிபட்டு வந்தால் எந்த நாளும் இனிய நாளாக மாறும்.

**வளர்ச்சி கூட்டும் வார வழிபாடு**

செவ்வாய்க்கிழமை தோறும் விரதமிருந்து கந்தப்பெருமானை சொந்தப் பெருமானாக வழிபாடு செய்யுங்கள். சந்தோஷங்கள் நாளும் வந்து சேரும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் தன லாபங்கள் நாளும் வந்து சேரவும், தங்கம், வெள்ளி, தங்கவும் மங்கல ஓசை மனையில் கேட்கவும், பட்ட மங்கலத்தை நோக்கி வாருங்கள். அங்குள்ள தென்முகக் கடவுள் வழிபட்டவுடன், கேட்ட வரத்தைக் கொடுப்பார். யோக பலம் பெற்ற நாளில் எண்ணிக்கை அடிப்படையில் பிரகாரங்கள் சுற்றினால் எண்ணங்கள் நிறை வேறும்.

**தொழில் வளம் மேலோங்கும் நேரம்**

குரு உங்கள் ராசிக்கு 2,5 க்கு அதிபதியாக விளங்குகிறார். அவர் தனது சொந்த வீடான தனஸ்தானத்தில் உலா வரும் பொழுது பணப்புழக்கம் அதிகரிக்கும். பாராட்டும், புகழும் கூடும். மனதில் நினைத்ததெல்லாம் மறு விநாடியே நடந்துவரும். உற்றார் உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். நீங்கள் வெற்றி தேவதையை வீட்டிற்கு அழைத்துவர நல்ல வாய்ப்பு உருவாகும் நேரமிது. குடும்பத்தில் மங்கல ஓசை கேட்க வழி கிடைக்கும். தொட்ட காரியம் அனைத்தும் தொகையை வரவழைத்துக்கொடுக்கும்.

இரண்டில் குரு வந்தால்
இல்லத்தின் மகிழ்ச்சி கூடும்!
திரண்ட செல்வம் வரும்!
தேனான வாழ்வமையும்!
உறவினர்கள் ஒத்துழைப்பர்!
உற்சாகம் குடிகொள்ளும்!
பரவி வரும் புகழ் கூடும்!
பாராட்டும் வந்திணையும்!
என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

இரண்டில் குரு சஞ்சரிக்கும் பொழுது லாபம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் இரு மடங்காக வந்துசேரும். குடும்பத்தில் அனைவரின் தேவைகளையும் பூர்த்தி செய்வீர்கள். ஒற்றுமை பலப்படும். ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணை புரியும் விதத்தில் பல வாய்ப்புகள் வந்து கொண்டே இருக்கும். சொத்துக்களால் லாபம் கிட்டும். எதிரிகள் விலகுவர்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம் 5.4.2008 முதல் 20.9.2008 வரை**

2,5க்கு அதிபதியான குருவக்ரம்பெறுகிறார். எனவே இக்காலத்தில் கூடுதல் விழிப் புணர்ச்சி காட்டினால் தான் குடும்பத்தில் அமை தியைக் காண இயலும். யாருக்கும் வாக்கு கொடுக்கும் முன் ஒரு கணம் யோசிப்பது நல்லது. குடும்பத்தினரின் கருத்துக்களை பரிசீலனை செய்து அவர்களை அனுசரித்து சென்றால் ஆனந்தம் என்ற ஐந்தெழுத்து இல்லத்தில் அரங்கேறும். கல்யாணம், காது குத்து, மணிவிழா, முத்து விழா என்று அடிக்கடி நிகழ்ச்சிகள் வந்து அதற்கென ஒரு தொகை யைச் செலவிட வைக்கும். விருந்தினர் வருகை அதிகரிக்கும்.

**விருச்சிக ராசிப் பெண்களுக்கு விருப்பங்கள் நிறைவேறும்**

தனுசு ராசியில் சஞ்சரிக்கும் குருவால் விருச்சிக ராசியில் பிறந்த பெண்களுக்கு விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். குடும்ப ஸ்தானம் பலம் பெறுவதால் சந் தோஷமான சம்பவங்களைச் சந்திக்கும் சூழ் நிலை உருவாகும். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். உங்கள் கருத்துக்களுக்கு உடனிருப்பவர்கள் ஒத்து வருவர். நீங்கள் அடியெடுத்து வைத்த நேரம் அதிர்ஷ்டமாக இருக்கிறது என்று புகுந்த வீட்டில் உங்கள் புகழ் பரவும். சேமிப்பு உயரும், உச்சிமுதல் உள்ளங் கால் வரை நகை அணிந்து மகிழும் வாய்ப்பு கிட்டும். வக்ர காலத்தில் ஆலயங்களை நோக்கி அடியெடுத்து வைத்து யோக பலம் பெற்ற நாளில் தெய்வங்களை வழிபட்டால் தேகநலன் சீராகும். செல்வ வளம் பெருகும். உடன் பிறப்புகள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவர். கடை திறப்பு, விழா, காம்ப்ளக்ஸ் திறப்பு விழா என்று மாதம் ஒரு மங்கல நிகழ்ச்சி நடத்தி மகிழ்வீர்கள். (தொடரும்)

## ஒலித்தட்டு வெளியீட்டு விழா!!

தமிழகம் திருவாவடுத்துறை ஆதீன 23 ஆவது குரு மகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் அருளாசியுடன் திருமுறைத் தேனமுது பாகங்கள் 7,8,9,10 ஒலித்தட்டு வெளியீட்டு விழா 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் திருமுறை மங்கல இசை நாதஸ்வர வித்துவான் பி.எஸ். பாலமுருகன் திருமுறைப்பாராயணம், வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவி தெ.பவனுயா, வரவேற்புரை திருநெறிய தமிழிசை வெளியீட்டுக் கழகத்தலைவர் சி.வெற்றிவேலாயும், ஆசியுரை ஸ்ரீ சிவகுருநாத குருபீட ஸ்ரீமத் வேத வித்யாசாகர சுவாமியும், நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் கோயில் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ ச.மகாலிங்கசிவக் குருக்கள், வாழ்த்துரை இந்து கலாச்சார திணைக்கள முன்னாள் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், அகில இலங்கைத் திருமுறை மன்ற தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகமும் யாழ். சைவ பரிபாலனசபை தேர்வுச் செயலாளர் இரா. செல்வடிவேல், திருவாவடுதுறை ஆதீன சமயப் பிரசாரக ஆசிரியர் ஏ. அனுசாந்தன், வெளியீட்டுரை செஞ்சொற்செல்வர் ஆறு திரு முருகன் நயப்புரை சங்கீத வித்துவான் பொன்.ஸ்ரீ.வாமதேவன் ஆகியோர் ஏற்புரை வழங்குவார். கே. எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் நிகழ்த்துவார். முதற்பிரதியை தொழிலதிபர் பே.நாகரத்தினம் பெறுவதற்கு நிறைவுரையை கு.பாலஷண்முகனும் நன்றியுரையை மு.க. திருலோகநாதனும் வழங்குவார். (அ)

## கௌரி நோன்பு பூர்த்தி விழா

நாளை வெள்ளிக்கிழமை கேதாரகௌரி விரதப் பூர்த்தியை முன்னிட்டு உரும்பிராய் கிழக்கு கண்ணகா ஸ்ரீபரமேஸ்வரி ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் ஆராதனைகள் இடம்பெறவிருக்கின்றன.

இந்நிகழ்வில் 'கௌரி நோன்பின் மகத்துவம்' என்ற பொருளில் மதுரகவி காரை எம். பி. அருளானந்தனும் 'பாடும்பணி' என்ற பொருளில் சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரனும் சொற்பெருக்காற்றவுள்ளனர். (அ)

## மாணவர் கௌரவிப்பு விழா

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை நிகழ்த்திய 22 மாணவர்கள் பாராட்டிக்கௌரவித்து விழாவை மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம் தீபாவளித்தினமான இன்று நடாத்துகின்றது. இம் மாணவர்களுக்கு அமரர் தர்மகுலசிங்கம் ஞாபகார்த்த பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. அமரர் தர்மகுலசிங்கம் நினைவும் பேருரையும் இடம்பெறும்.

சனசமூக நிலையத்தலைவர் என்.தங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவிலே பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் சி.பசுபதி பிரதம விருந்தினராகவும் வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம் பிரதம இலிகிதர் ஆ. புண்ணியமூர்த்தி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-52)

## கைத்தொலைபேசி பாவனை சிறுவருக்கு கட்டுப்பாடு!

செல்போன் பாவனையை 18 வயதுக்கு குறைந்த சிறுவர்களிடையே கட்டுப்படுத்துவது தொடர்பில் சிறுவர் அபிருத்தி மற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை அமைச்சு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர்களிடையேயான செல்போன் பாவனையால் அவர்கள் தவறான முறையில் வழிநடத்தப்படுவதாவும் மற்றும் பிழையான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு வழியேற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டு வருவதையடுத்தே இந்த விடயம் தொடர்பில் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளிலும் அவர்களின் செல்போன் பாவனையானது தீங்கான விளைவுகளை ஏற்படுத்துவதோடு இதனால் அவர்கள் தமது பாடங்களில் குறைந்த புள்ளிகளைப் பெறும் நிலையும் ஏற்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## சிரமதானப் பணி

காலை 9.00 மணிக்கு பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலையில் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிறு நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு கியுடெக் கரிதாஸ் இயக்குனர் வணபிதா சி.ஜி. ஜெயக்குமார் அடிகளார் சமூகம் கொடுத்து சிரமதான பணியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (அ)

# தீபாவளி சிறப்பு மலர் – 08.11.2007




## சிந்தையில் நல்லுணர்வைத் தூண்டும் தீப ஒளி பிரகாசிக்கட்டும்

**கொமர்ஷல் வங்கி**

உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

---

**தேசத்தின் முதல்தர வங்கி வருடாந்த அறிக்கையான உலகின் கௌரவமிக்க விருதினைவென்றெடுத்தது**

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
**Bank Of Ceylon**
Bankers to the Nation

## அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு இலங்கை வங்கியின் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

- இலங்கை வங்கி அதன் 2006 ஆம் ஆண்டு அறிக்கைக்கான உலகின் கெள்ரவமிக்க விருதுகளில் நான்கினை வென்றெடுத்துள்ளது.
- "வருடாந்த அறிக்கைக்கான அகடமி விருதுகள்" தொடர்பில் 2006 ஆம் வருடத்திற்கான வருடாந்த சர்வ தேச விருதுகள் போட்டியில் 26 நாடுகளிலிருந்து கலந்துகொண்ட 1900நிறுவனங்களுடன் இலங்கை வங்கியும் போட்டியிட்டது.
- இதில் "வங்கிகள் - தேசிய வர்த்தகம்" என்பதன் கீழ் மரபு வழியல்லாத வருடாந்த அறிக்கைப் பிரிவில் மிக உயர்ந்த தங்க விருதை இலங்கை வங்கி தட்டிக்கொண்டது.
- இதன் முழுவிவரம் www mercommawards.Com இல் பெற்றுக்கொள்ளலாம்.
- 2006 LACP வருடாந்த சர்வதேச தரிசனம் (VISION) விருதுகளில் இலங்கை வங்கி 21 நாடுகளிலிருந்து வந்த 2,500 நிறுவனங்களுடன் போட்டியில் கலந்துகொண்டது.
- இதில் வருடம் 1 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் உள்ள வர்த்தக - வங்கிகள் பிரிவில் மிக உயர்ந்த பிலாட்டனம் (Platinum) விருதை வென்றெடுத்துள்ளது.
- சகல பிரிவுகளுக்குமான போட்டியில் இலங்கை வங்கி நிதித்துறையில் சிறந்த அறிக்கைக்கான வெண்கல விருதினை வென்றது.
- மற்றும் 2006ஆம் ஆண்டுக்கான சிறந்த 100 அறிக்கைகள் போட்டியில் 37 ஆவது இடத்தைப் பெற்றது.

# தீபாவளி சிறப்பு மலர் - 08.11.2007

## நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசி



புத்தாடை புனைந்து புத்துணர்ச்சி பொங்க புதுச் சிந்தனைகளோடு ஆண்டவன் பொற்கமல பாதம் பணிந்து உறவினர்களுடனே இனிப்புப் பதார்த்தங்களை உண்டு மகிழ்ந்து குதூகலிக்கும் பொன்னாள் இது. இலங்கை வாழ் மக்கள் அனைவருமே இன்று சந்தோஷமான, மகிழ்ச் சியான, இன்பமான வாழ்வைப் பெறவேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாதபங்கயம் பணிந்து எல்லாம் வல்ல நல்லூர்க் கந்தப் பெருமானின் பரங் கருணைத் தடங்கடலில் மூழ்கித் திளைத்து இன்ப வாரிதியில் களிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து அருளாசி நல்குவதில் பேருவகை அடைகின்றோம்.

தீப வரிசையானது நல்லொளியைப்பரப்பி நிற்பது போல இன்றைய தீபாவளி மக்களுக்கு அவர்களது வாழ்வில் இன்பப் பிரகாசத்தை வழங்கவேண்டுமென்பதே எமது வேணவா. ஆகவே, இன்றைய தீபாவளித் திருநாளில் அனைவருமே நல்ல மகிழ்ச்சிகரமான சுபிட்சம் நிறைந்த மங்களகரமான வாழ்வில் நலம் பெற வேண்டுமென உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

## செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் வாழ்த்துச் செய்தி



இந்துக்களின் இனிய விழாக்களில் தீபாவளி திருநாள் முதன் மையானது. அறம் வெல்லும் என்ற அரிய கருத்தினை இந்நாள் அனைவர்க்கும் போதிக்கின்றது. இருளில் இருந்து இவ்வுலகம் விடிவு பெற்ற நாளாக இந்நாளை எம்முன்னோர் கருதுவர். இந்நாளில் இறைவழிபாட்டுக்கு முதன்மை கொடுப் பது எம் பாரம்பரியமாகும். நாம் செய்த தவறுகளுக்காக இறைவனிடம் மன்றாடுவதும் , இனிமேல் நாம் நேர்த்தியாக வாழ்வதற்கு இறையருளை வேண்டுவதும் வழிபாட்டின் முதன்மை அம்சமாகக் கொள்ள வேண்டும். எங்கள் மண்ணில் அனைவரும் அச்சமின்றி, அவலமின்றி , அனுதினமும் அகமகிழ்ந்து நாமும் வாழ வழி கிடைக்க வேண்டும் என அனைவரும் பிரார்த்திப்பது அவசியமாகும். எம் வாழ்வில் எமக்குக் கிடைத்த நன்மைகள் அனைத்துக்காகவும் இறைவனுக்கும் எம்மை ஆளாக்கியவர்களுக்கும் எமக்கு உதவியவர்களுக்கும் இந்நாளில் நன்றி சொல்வோம். ஏழ்மையால், நோயினால், பிரிவுகளினால் நொந்து போய் இருப்பவர்களுக்கு கருணை உள்ளத்தோடு ஆறுதல் செய்ய முற்படுவோம் .

நல்லதையே நினைப்போம்! இனிமேல் நடப் பவை யாவும் நல்லனவாக நடந்தேற வேண்டுமென்று இறை வனைத் துதிப்போம். அன்பு , பண்பு, கருணை , களம் , உண்மை என்ற வார்த்தை கள் எம் வாழ்வின் ஆதாரங்களாக நிலைக் கட்டும் மனம் தளராது அனைவரும் மகிழ்வோடு வாழ இந் நாளை வரவேற்றுக்கொள்ளுங்கள். இடர் நீங்கி அனைவரும் இன்புற்றுவாழ இனியவாழ்த்துக்களையும் , நல்லாசிகளையும் கூறி இறைவனை இறைஞ்சுகிறேன்.



## ஒளிமயமானதொரு எதிர்காலம் உதயமாக வேண்டும் அகில இலங்கை இந்துமாமன்றம் தீபாவளிச் செய்தி

தொன்மைச் சிறப்புமிக்க இந்து மதத்தின் முக்கியத்துவம் வாய்ந்த திருநாளாகிய தீபாவளி வாழ்வில் இருளை நீக்கி ஒளியைக் கொடுக்கும் வகையில் சிறப்புப் பெறுகிறது. நாட்டின் இன்றைய கால கட்டத்தில் வரும் தீபாவளி நம் நாட்டு தமிழ் மக்களுக்கு எந்த வகையிலும் குதூகலத்தை வழங்கப் போவதில்லை. அவர்கள் அனுபவித்துவரும் துன்ப துயரங்களும் இன்னல்களும் இழப்புகளும் வார்த்தைகளால் சொல்ல முடியாதவை.இத்தகைய துரதிர்ஷ்டவசமான நிலையில் கேளிக்கைகள் விழாக்களுடன் தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவதும் பரஸ்பரம் வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொள்வதும் எவ்வகையிலும் பொருத்தமானதாகத் தெரியவில்லை.

இன்னல்களுக்கும் அவலங்களுக்கும் இடப்பெயர்வுகளுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம் நாட்டு தமிழ் மக்களுக்கு -நமது உடன்பிறப்புகளுக்கு விமோசனமும் வாழ்வில் நிம்மதியும் மகிழ்ச்சியும் வேண்டி இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டிய நாளாக தீபாவளி தினத்தை அனுஷ்டிக்க வேண்டும். இந்தப் புனிதமான நாளிலே மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்ற நல்ல சிந்தனையுடன் இந்து மக்கள் மனிதநேயப் பணிகளுக்கு ஆதரவும் உதவியும் வழங்கும் புண்ணிய கைங்கரியத்தையும் செய்யவேண்டும்.

கண்ணீரும் கம்பலையுமாக வாழும் ஆயிரக்கணக்கான எமது உடன்பிறப்புகளுக்கு ஆதரவும் உதவியும் தேவை எம்மாலான மட்டும் சிலரது ஆதரவுடன் மனிதநேயப் பணிகளை மாமன்றத் தின் ஊடாகத் தொடர்கின்றோம். எனினும் சர்வதேச ரீதியில் உதவிகள் போதாது. எமது மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு ஆக்கபூர்வமான ஆதரவு தருவதுடன் அவர்களது அவல நிலையை சர்வதேச ரீதியில் உரிய இடங்களுக்கு எடுத்துக்கூறி நிரந்தரமான சமாதானத்தை நிலைநாட்ட அழுத்தம் தர பாரெல்லாம் பரந்து வாழும் எங்களது உறவுகள் முன்வரவேண்டும் எனவும் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட் டுள்ளோம்.காலத்துக்குக் காலம் பல்வேறு பட்ட துயரங்களை அனுபவிப்பதன் ஊடாக சொல்லொண்ணா வேதனையால் வாடும் எங்கள் தமிழ் மக்களது வாழ்வு டன் இணைந் திருக்கும் துன்ப இருளானது விரைவில் நீங்கி அவர்களுக்கு ஒளிமயமானதொரு எதிர்காலம் உதயமாக வேண்டும் எனஅகில இலங்கை இந்துமா மன்றம் இறைவனைப் பிரார்த்திக்கின்றது.

## சமாதான ஒளி பரவட்டும்



ஒளித் திருநாள் தீபாவளி இருட்டைப் போக்கி இல்லங்களில் மங்கலத்தை ஏற்படுத்துவதே தீபாவளிப்பண்டிகையின் நோக்கம். வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி என்று பாடுகிறார் மணிக்க வாசகர். ஒளிவடிவானவன் இறைவன். தீப மங்கள ஜோதி நமோ நம என்கிறார் அருணகிரிநாதர். அஞ்ஞானம் என்ற இருட்டிலிருந்து ஞானம் என்னும் வெளிச்சத்திற்கு வருவதை நம் பெரியோர்கள் இப்படிப் பாடியுள்ளனர்.

அதர்மத்தை அழித்து தர்மத்தை நினைவு கூறும் நாளே தீபாவளி . மன இருள் அகல வேண்டி ஜோதிவடிவான இறைவனை போற்றும் நாள் தீபத்திருநாள். சூரபத்மன் வதத்திற்காக முருகப்பெருமான் சிவபெருமானு டைய நெற்றிக்கண் தீப்பொறியில் இருந்தே அவதரித்தார். பஞ்ச பூதங்களில் அக்னி (தீ) க்கு பிரதான இடமுண்டு . அக்னி சாட்சியாகத்தான் இன்று இந்துத் திருமணங்கள் நடக்கின்றன. ஒளிக்கு மிகுந்த ஏற்றம் தந்துள்ளனர். ரிஷிகளும் முனிவர் களும், மின்னலை பண்டைய மக்கள் தெய்வமாக வழிபட்டுள் ளனர்.

நரகாசுரனுடைய துர்குணத்தையும் , தீய எண்ணத்தையும் அவன் செய்த இன்னலைத்தான் போக்க வேண்டித்தான் கிருஷ்ண பரமாத்மா அவனை ஸம்ஹாரம் செய்தார் ஆக மக்களின் துயர் நீக்கும் திருநாளே தீபாவளி. மக்கள் யாவரும் நலமாக இருக்க வேண்டி எடுத்த அவ தாரமே கிருஷ்ணாவதாரம் . கிருஷ்ணாவதாரத்தில் தீபாவளிப் பண்டிகை மிக முக்கிய அங்கம் வகிக்கிறது. மனிதனுக்கு காமமும் குரோதமும் கூடாது.

பேராசையும், துர்க்குணமும் கூடாது என்பதை இந்த தீபாவளி நரகாசூரவதத்தின் மூலம் உணர்த்துகிறது. பண்டிகையின் உற்சாகத்தில் மேற்கண்ட குணங்கள் இனிமேல் இருக்கக்கூடாது என்பதை வேண்டுதலாக பிரார்த்திக்க வேண்டும். இவ்வாறு பிரார்த்திப்பதே உண்மையான தீபாவளியின் நோக்கம்.

இந்தத் தீபாவளித் திருநாளில் பாழாய்ப்போன ஆசைகளையெல்லாம் பட்டாசாய் கொளுத்திடுவோம். போட்டி பொறாமை, வஞ்சகம் இவற்றை தீயிட்டு எரித்திடு வோம். மனித மனங்களில் மங்கலம் பிரகாசிக்கட்டும் எங்கும் சமாதான ஒளி பரவட்டும்.

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர்(ஜே.பி)**
**சிவாச்சார்ய பீடாதிபதி - அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்,**
**பிரதம குரு- வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.**

## ஆணவம் அகன்ற நாள்

இன்நாள் இனிய திருநாள் மகிழும்
நன்நாள் நலங்கள் தரும்நாள் வாழ்வில்
பொன்நாள் புனிதப் பெருநாள் தீய சூரனை
முன்நாள் இறைவன் அழித்தநாள் அறங்கள்
ஜனித்தநாள் ஆணவம் அகன்றநாள் இன்பம்
கனிந்தநாள் தீபம் ஏற்றும் தீபாவளி திருநாள்

**அல்வாயூர் சி.சிவநேசன்**

## சேக்கிழார் விழா போட்டி முடிவுகள்

"சேக்கிழார் விழாவும் சைவசமய மாநாடும்" கொண்டாடப்படுவதையொட்டி இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச அறநெறிப்பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள்.

### பேச்சுப் போட்டி

*கீழ்ப்பிரிவு*

முதலாம் இடம்:- சூரியமூர்த்தி சிந்திர்லா -மட்டுவில் மகாமுத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை, இரண்டாமிடம்:- தேவராசா அனோஜினி- சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் அறநெறிப்பாடசாலை, மூன் றாம் இடம்:- கோபால கிருஷ்ணன் தயாளினி- மிருசுவில் அரசடிப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை.

*மத்தியபிரிவு*

முதலாமிடம்:- பரிமேலழகன் சர்வோதினி- கொடிகாமம் தவசி குளம் கண்ணகை அம்மன் அறநெறிப் பாடசாலை,இரண்டாம்:- ஜெயநேசன் பிறின்ஸ்-நுணாவில் ஸ்ரீவீரபத்திரர் அறநெறிப் பாடசாலை,

மூன்றாம் இடம்:- கனகநாயகம் துருவாசன்-மட்டுவில் வேரற்கேணி கந்தசுவாமி அறநெறிப் பாடசாலை,

இராமச்சந்திரன் கபிலினி- கிராம்புவில் பாலமுருகன் அறநெறிப் பாடசாலை.

*மேற்பிரிவு*

முதலாம் இடம்:- செல்வராசா துர்க்காஜினி- மட்டுவில் வேரற் கேணி கந்தசுவாமி அறநெறிப் பாடசாலை, இரண்டாம் இடம்:- தில்லைநாதன் ஆரணி-மட்டுவில் மகாமுத்துமாரி அம்மன் அறநெறிப்பாடசாலை, மூன்றாமிடம்:-சின்னத்தம்பி அகல்யா- மீசாலை இந்துமன்ற அறநெறிப் பாடசாலை.

### கட்டுரைப்போட்டி

*கீழ்ப்பிரிவு*

முதலாமிடம் :-ராஜ்குமார் ரஜிந்தன்-சாவகச் சேரி வாரிவனம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை,இரண்டாமிடம்: - அசோக்குமார் சர்மினி -தவசிகுளம் கண்ணகை அம்மன் ஆலய அறநெ றிப் பாடசாலை, மூன்றாமிடம்:- இராகவன் இராகவி -சங்கத்தானை இத்தியடி இந்து இளைஞர்மன்ற அறநெறிப் பாடசாலை.

*மத்திய பிரிவு*

முதலாமிடம்:- கருணாகரன் சுகந்தினி-சங்கத்தானை இத்தியடி இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை, இரண்டாமிடம்:-சங்கரப்பிள்ளை வர்மிளா-தவசிகுளம் கண்ணகை அம்மன் ஆலய அறநெறிப் பாட சாலை,

மூன்றாமிடம்:- சிவரஞ்சன் அபிராமி-சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை, சந்திரராசா யதீசன்- அல்லாரை அறுகம்புலம் மகா கணபதிப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை.

*மேற்பிரிவு*

முதலாமிடம்:-சிவகுரு கஸ்தூரி- மீசாலை இந்துமன்ற அறநெறிப் பாடசாலை, இரண்டா மிடம்:-தேவதாசன் சத்தியகௌரி-அல்லாரை அறுகம்புலம் மகா கணபதிப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, மூன்றாமிடம்-ஸ்ரீவிஜயகாந் யதுர்ஸன்-கிராம்புவில் பாலமுருகன் அறநெறிப் பாடசாலை.

### சமய அறிவுப் போட்டி

*கீழ்ப்பிரிவு*

முதலாமிடம்:- சிங்கராசா லோகிதன்-அல் லாரை அறுகம்புலம் மகா கணபதிப்பிள்யைார் அறநெறிப் பாடசாலை, இரண்டாமிடம் -உருத்திரராசா விதுஷா-சாவகச்சேரி ஸ்ரீபழநியாண்டவர் அறநெறிப் பாடசாலை, மூன்றாமிடம்-யோகநாதன் ரக்சனன்- கச்சாய் கண்ணகை அம்மன் அறநெறிப்பாடசாலை.

*மத்தியபிரிவு*

முதலாமிடம்:-தங்கராசா அமிர்தவர்சனி-சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை, இரண்டாமிடம்:- பரிமேலழகன் சர்வோதினி -கொடிகாமம் தவசி குளம் கண்ணகை அம்மன் அறநெறிப் பாடசாலை,மூன்றாமிடம்:-சத்தியசீலன் தர்சிகா-சாவகச்சேரி ஸ்ரீபழநியாண்டவர் அறநெறிப்பாடசாலை.

*மேற்பிரிவு*

முதலாமிடம்:-இந்திரபவன் சுபிதா- மட்டுவில் ஸ்ரீநாராயணன் (கண்ணன்) அறநெறிப் பாடசாலை, இரண்டாமிடம்:-தனபாலசிங்கம் ஆதவன்- மிருசுவில் அரசடிப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, மூன்றாமிடம்:- கயிலாயபிள்ளை பிரித்திகா: அல்லாரை அறுகம்புலம் மகா கணபதிப் பிள்ளையார் அறநெறிப் பாட சாலை.

### நாடகம் (திறந்த போட்டி)

முதலாமிடம்:-கொடிகாமம் தவசி குளம் கண்ணகை அம்மன் அறநெறிப் பாடசாலை.

இரண்டாமிடம்:- மட்டுவில் வேரற் கேணி கந்த சுவாமி அறநெறிப் பாட சாலை (அ)

## தீபத் திருநாளே வருக

யுத்த பூமியின் சிவந்த மடியில்
வெடியோசை அதிர்வுகளின் எதிரொலிப்பில்
விசையாக அழுத்தித் தேய்க்கும்
விலைச் சுமைகளின பாரத்தில்
வழிபுரியாது இடர்படும் வாழ்க்கைப் பயணத்தில்
துளிர்விடும் நம்பிக்கையோடு நாளைய
நல்ல பொழுதிற்காய் அக விழி திறந்து
காத்திருக்கின்றோம் - தீபத் திருநாளே!
சமாதானத்தின் மணிக்கதவம் திறந்து
வைகறை விடி வெள்ளியாக
ஒளிவீசி வருக ,மலர்தூவி வரவேற்கின்றோம்

**கா. கார்த்திகேசு**

## வலதுகுறைந்தவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க டக்ளஸ் தலைமையில் தேசிய சபை

வலது குறைந்தவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் தேசிய சபையொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைத்துள்ளதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் செயலாளர் வி.ஜெகராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

செயலாளர் மேலும் கூறியுள்ளதாவது,

நாட்டிலுள்ள மொத்த சனத் தொகையில்10 வீதத்தினருக்கும்அதிகமானோர் வலது குறைந்தவர்கள். இவர்கள் ஏனையவர்களைப் போல் சமூகத்தில் சமமான வகையில் வாழ்வதற்கு உரிய உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அரசாங்கம் 1998 இல் வலது குறைந்தவர்களின் உரிமைகள் கட்டளைச் சட்டத்தை நிறைவேற்றியது.

இக் கட்டளைச் சட்டத்தை நிறைவேற்றியது. இக் கட்டளைச் சட்டத்தின் மூலம் வலது குறைந்தவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் தேசிய சபையை ஜனாதிபதி நியமித்துள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

பொறுமையை எங்கு கைவிடுகிறோமோ-
அங்கு பலாத்காரம் உருவெடுக்கிறது.
- ருமேனியா

வலம்புரி

## சர்வதேச சமூகத்திற்கு தீபாவளி கூறுவது என்ன?

இன்று தீபத்திருநாள். உலகுவாழ் இந்துக்களினால் அனுஷ்டிக்கப்படும் இத்திருநாளின் தத்துவம் அற்புதமானது. அதில் நாம் உய்த்துணரவேண்டிய உண்மைகள் பல உண்டு.

நரகாசூரன் என்ற அரக்கனால் தேவர்களும் மானிடர்களும் பெரும் அவலப்பட்டனர். அந்த அவலத்திலிருந்து தம்மை மீட்டெடுக்க தேவர்கள் காத்தல் கடவுளாகிய கண்ண பரமாத்மாவிடம் முறையிட்டனர்.

தேவர் உலகின் அவலம் நீக்க கண்ண பரமாத்மா திருவுளம் கொண்டு நரகாசூரனை வதம் செய்தார். அந்த நாளை மக்கள் தீபங்களை ஏற்றி கொண்டாடி மகிழ்ந்தனர்.

நரகாசூரனின் கொடுமையால் இருள் சூழ்ந்த வாழ்வை அனுபவித்த மக்கள் அவனின் அழிவினால் தமது வாழ்வில் ஒளி பிறந்த உணர்வை வெளிப்படுத்த தீபங்களை ஏற்றி தமது மகிழ்ச்சியை தெரிவித்தனர்.

இது புராணக் கதையாக இருப்பினும் அதற்குள் மானிட வாழ்வின் அவலங்களும், விடிவுகளும் உணர்த்தப்படுகின்றன. மற்றவர்களிற்கு இடைஞ்சல் விளைவிக்காத வாழ்வே ஒளி மயமானது. துன்பங்களை இழைப்பதனால் தானும் துன்பப்பட்டு மற்றவர்களையும் துன்பத்திற்கு ஆளாக்குவதைத் தவிர வேறு எதுவும் நடக்கப்போவதில்லை.

இதனையே நரகாசூரனின் கதை எமக்கு விளக்குகின்றது. இத்தகைய புராண,இதிகாசக் கதைகள் மனித சமூகத்திற்கு நீதியை-தர்மத்தை எடுத்துரைப்பனவாக உள்ளன.

அதிலும், தீபாவளிக் கதை இலங்கைக்கு வெரிதும் பொருந்துவதாக உள்ளது. அதாவது,பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தை நசுக்குகின்றது. அவர்களின் உரிமையை மறுக்கிறது. இதனால் சிறுபான்மையின மக்கள் சொந்த இருப்பிடமின்றி பல ஆண்டுகளாக அகதிகளாக அலைகின்றனர். அரசின் ஒரு பக்கச்சார்பினால் ஈழத் தமிழர்கள் பெரும் அவலங்களை சந்தித்துள்ளனர்.

தமிழகத்தில் கூட அகதிமுகாம்களில் ஈழத்தமிழர்கள் அவலப்படுகின்றனர். எனினும் இது பற்றி அரசு சிந்திப்பதாக இல்லை. எனது நாடு; எனது மக்கள் என்ற நினைப்பு ஆட்சியாளர்களுக்கு இருக்குமாயின் தமிழகத்தில்-அகதி முகாம்களில் அல்லல்படும் ஈழத்தமிழர்களின் எதிர்காலம் பற்றி சிந்தித்திருக்க வேண்டும்.

ஆனால், அந்தச் சிந்தனை இம்மியும் இல்லையெனில், அவர்கள் தமிழர்கள் எக்கேடு கெட்டாலும், எப்பாடு பட்டாலும் நாம் அதைப் பற்றி கவலை கொள்ளப்போவதில்லை என்பதே அரசின் முடிபாகும்.

இந்த முடிபால் சிறுபான்மைத் தமிழினம் தாங்கொணாத் துன்பத்தை அனுபவிக்கின்றது. துன்பப்படுவதை பார்த்திருப்பது கூட பாவமென்பதே இந்து தர்மத்தின் அடிப்படை.

தேவர்களின் துன்பங்களை களைய கண்ண பரமாத்மா திருவுளம் கொண்டதுபோல ஈழத் தமிழர்களின் அவலம் போக்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் என்பதையே தீபாவளி திருநாள் எடுத்தியம்புகிறது.

# போலிக் கடவுச்சீட்டின் மூலம் கருணாவை பிரித்தானியாவுக்கு அனுப்பிய இலங்கை அரசு

## 'த மோர்னிங் லீடர்' அம்பலம்

இலங்கை அரசாங்கமே போலிக் கடவுச்சீட்டின் உதவியுடன் துணை இராணுவக்குழுவின் தலைவரான கருணாவை பிரித்தானியாவுக்கு அனுப்பியதற்கான சான்றிதழ் கிடைத்துள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் த மோனிங் லீடர் வார ஏடு அம்பலப்படுத்தியுள்ளது. புதன்கிழமை வெளி வந்த அந்த வார ஏட்டில் வெளிவந்த முக்கிய பகுதிகள் வருமாறு,

உயர் அதிகாரிகளின் உத்தரவுகளுக்கு அமைய கோகில குணவர்த்தன என்ற பெயரில் கருணாவுக்கு கடந்த ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி இலங்கையின் குடிவரவு-குடியகழ்வு திணைக்களம் போலியான கடவுச்சீட்டை வழங்கியுள்ளது. இது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து வெளிவிவகார அமைச்சின் பரிந்துரையினைத் தொடர்ந்து கோகில குணவர்தன என்ற பெயரில் கருணாவுக்கு கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகம் நுழைவு அனுமதியை வழங்கியுள்ளது. இந்த அனுமதி கடந்த செப்ரெம்பர் மாதம் ஐந்தாம் நாள் வழங்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் நடைபெறும் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் கலந்துகொள்பவர்கள் என ஒரு தொகுதி கடவுச்சீட்டுக்களை வெளிவிவகார அமைச்சு பிரித்தானியா தூதரகத்திற்கு மூன்றாம் நபரூடாக அனுப்பியிருந்தது. நுழைவு அனுமதிகளை வழங்குவதற்கான பரிந்துரைக் கடிதமும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்ததுடன் கோகில குணவர்த்தனாவின் கடவுச்சீட்டு உள்ளிட்ட பலரது கடவுச்சீட்டுக்கள் ராஜதந்திரிகளுக்குரியவை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

சுற்றுச் சூழல் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் அதிகாரத்தின்கீழ் வரும் சுற்றுச்சூழல் துறை அமைச்சின் திணைக்களத்தின் அதிகாரியே கோகில குணவர்த்தன எனவும் பரிந்துரை செய்யப்பட்டது.

கோகில குணவர்த்தன என்ற பெயரில் உள்ள கடவுச்சீட்டு பிரித்தானியாவுக்கு பயணமான கருணா ஹீதுத்ரூ வானூர்தி நிலையத்தில் செப்ரெம்பர் 18ஆம் திகதி இறங்கியுள்ளார். பண்டாரநாயக்க அனைத்துலக வானூர்தி நிலையம் வரையிலும் வானூர்தி நிலைய மற்றும் வானூர்தி போக்குவரத்து பிரதிப் பணிப்பாளரான சாலித விஜயசுந்தர, கருணாவுடன் கூட வந்ததாகவும் முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது எனினும் இன்று வரை அவர் அதனை மறுக்கவில்லை.

பிரித்தானியாவில் உள்ள கென்சிங்ரன் பகுதியில் வைத்தே கருணா கைதுசெய்யப்பட்டதாக பிரித்தானிய தகவல்கள் தெரிவித்துள்ளன .அங்குதான் அவரது மனைவி மூன்று பிள்ளைகளுடன் வசித்து வருகிறார். கருணாவைக் கைதுசெய்த போது கோகில குணவர்த்தன என்ற பெயரில் அவர் வசம் இருந்த போலியான கடவுச்சீட்டையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே கருணா கைதுசெய்யப்பட்ட போது அவர் தனக்கு அரசியல் தஞ்சம் அளிக்குமாறு கேட்டுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கருணாவின் மனைவியும் மூன்று பிள்ளைகளும் முன்னர் பிரித்தானியாவுக்குள் நுழைந்துள்ளதுடன் அரசியல் தஞ்சத்திற்கும் விண்ணப்பித்துள்ளனர். அவர்களின் விண்ணப்பங்கள் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

பிரித்தானியாவின் பயங்கவாத தடுப்புப் பிரிவினரால் கருணா தற்போது விசாரணை செய்யப்பட்டு வருகின்றார். எனினும் கருணாவுக்கு நுழைவு அனுமதியைப் பெற்று கொடுப்பதற்கு தமது அமைச்சு பிரித்தானியா தூதரகத்திற்கு பரிந்துரைகள் எதனையும் வழங்கவில்லை என்று வெளிவிவகாரத்துறை அமைச்சின் செயலாளரான பாலித கோகன்ன தெரிவித்துள்ளார். ஆனால் போலியான கடவுச்சீட்டின் அடிப்படையில் அவருக்கு நுழைவு அனுமதியை பெற்றுக்கொடுப்பதற்கு பரிந்துரைகள் செய்யப்பட்டனவா என்று கேட்கப்பட்ட போது அதற்கு அவர் பதில் கூற மறுத்துவிட்டார்.

இராஜதந்திரிகளுக்கு வழங்கப்படும் கடவுச்சீட்டுக்களை வழங்குவதில் உள்ள நடைமுறைகள் தொடர்பாகவும் தனிப்பட்டவர்களுக்கு இராஜதந்திரிகளுக்கான கடவுச்சீட்டுக்களை வழங்குவதை யார் முடிபு செய்வது என்றும் கேட்கப்பட்ட போது இந்த கேள்விகளை குடிவரவு குடியகல்வு திணைக்களத்திடம் கேட்குமாறு பாலித கோகன்ன தெரிவித்திருந்தார்.

ஆனால் ஜனாதிபதி அலுவலகம் ஜனாதிபதி அல்லது வெளிவிவகார அமைச்சின் பரிந்துரைகளின் அடிப்படையில்தான் இராஜதந்திரிகளுக்கான கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படுவதாக குடிவரவு குடியகல்வுத்திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# மனிதநேய நடவடிக்கைக்காக பிரித்தானியா இலங்கைக்கு ஒரு மில்லியன் பவுண் உதவி

## சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் மலிக்

(கொழும்பு)

மனித நேய நடவடிக்கைகளுக்காக இலங்கைக்கு இவ்வருடம் 1 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களை நிதியுதவியாக வழங்கியுள்ளதாக பிரித்தானியாவின் சர்வதேச அமைச்சர் மலிக் தெரிவித்துள்ளார்.

மீள் குடியேற்றம், மீள் புனரமைப்பு உள்ளிட்ட மனிதநேய நடவடிக்கைகளுக்காகவே இந்திநியுதவி வழங்கப்பட்டதாக அமைச்சர் கூறியுள்ளார்.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற சர்வதேச அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதியொதுக்கீடு தொடர்பான விவாதத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றிற்கே மலிக் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரித்தானியாவின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் மலிக் இந்நிதியுதவியில் 8 இலட்சம் ஸ்ரேலிங் பவுண்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாகவும் 2 இலட்சம் ஸ்ரேலிங் பவுண்கள் ஐ.நா. முகவர் நிறுவனங்களின் நிலையியற் குழுவின் ஊடாகவும் வழங்கப்பட்டது.

இவை இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், மீள்புனருத்தாரன நடவடிக்கை செயற்றிட்டங்களுக்காகவே வழங்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தின் மனிதாபிமான நிலைமைகள் முன்னேற்றம் கண்டு வருகின்றது.

இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியமர்த்தப்படும் செயன்முறை மெதுவாகவே இடம்பெறுகிறது என்று கூறியுள்ளார். (அ-5)

## 'ஆத்ம தத்துவம்' உணர்வதற்கு ஆன்மீக சாதனை அவசியம்



எள்ளினுள் எண்ணெய் போல், பாலினுள் வெண்ணெய் போல், மலரினுள் மணம் போல், பழத்தினுள் இனிய சாறு போல், மரக்கட்டையினுள் நெருப்புப் போல் இந்த பிரபஞ்சம் முழுவதும் இறைவன் வியாபித்திருக்கிறார். திவ்யமான இந்த 'ஆத்ம தத்துவம்' எங்கும் நிறைந்திருப்பதை உணர வேண்டும்.

பாலை வெறித்துப் பார்ப்பதால் வெண்ணெய் கிடையாது. கைநிறைய எள்ளை எடுத்துக் கொள்வதால் எண்ணெய் கிடையாது.

செய்ய வேண்டிய வழி முறைகளைச் செய்வதன் மூலம் பாலிலிருந்து வெண்ணெய்யும், எள்ளிலிருந்து எண்ணெய்யும் கிடைக்கிறது.

அதே போல எங்கும் நிறைந் திருக்கும் தெய்வ தத்துவத்தைப் புரிந்துகொள்ள ஆன்மீக சாதனைகள் செய்ய வேண்டும்.

## போட்டிப் பரீட்சைகளுக்கான அனுமதி பத்திரங்கள் தபாலிடப்பட்டுள்ளன

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களைச் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை சிமா நிறுவனம் நடத்தும் பரீட்சைகள் மற்றும் இலங்கை தொழில் நுட்ப சேவையின் 2ஆம் தரத்திற்கான போட்டிப் பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் தபாலிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கேற்ப உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 17ஆம் 18ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இத்திறந்த போட்டிப்பரீட்சைக்கு 2 ஆயிரத்து 252 பேர் தோற்றவுள்ளனர். இப்போட்டிப் பரீட்சை குறித்த இரு தினங்களிலும் கொழும்பில் 16 நிலையங்களில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் சிமா நிறுவனம் நடத்தும் சிமா பரீட்சை இம்மாதம் 20,21 ஆம் திகதிகளில் கொழும்பிலும் கண்டியிலும் நடைபெறவுள்ளது. இலங்கை தொழில் நுட்ப சேவையின் 2ஆம் தரத்திற்கான போட்டிப்பரீட்சை இம்மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் ஆணையாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(அ-5)

## சிறுவர் கலைக்கூட பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற சிறுவர் கலைக்கூட சிறுவர்களுக்கான பயிற்சிப் பட்டறை இன்று 8.11.2007 காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை பருத்தித்துறை கலட்டி றோ.க.பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பருத்தித்துறை, கரவெட்டி,சில்லாலை, யாழ்ப்பாணம் ஆகிய சிறுவர் கலைக்கூடங்களைச் சேர்ந்த சிறுவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-4)

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பகிஷ்கரிப்பு ஐ.தே.க விருந்துபசாரத்தை புறக்கணிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் மூன்றவது வரவு செலவுத்திட்டம் நேற்று சபையில் நிதியமைச்சரும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ வரவு செலவுத்திட்டத்தினை சமர்ப்பித்து சுமார் ஒன்றரை மணி நேரமாக உரை நிகழ்த்தினார்.

நாடாளுமன்றம் சபாநாயகர் வி.ஜே.மு. லொக்குபண்டார தலைமையில் நேற்றுக் காலை 9.40 மணியளவில் கூடியது. சபாநாயகரின் வழமையான அறிவிப்புக்களையடுத்து சபைக்குள் வந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வரவு செலவுத்திட்ட அறிக்கையை சமர்ப்பித்து உரை நிகழ்த்தினார்.

இச்சம்பிரதாய பூர்வ நிகழ்வில் வெளிநாட்டு இராஜதந்திரிகள், அரச உயர் அதிகாரிகள், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர். இவர்கள் அனைவரும் சபாநாயகர் கலரியிலிருந்து நிகழ்வை பார்வையிட்டனர்.

இதேவேளை அரச தரப்பின் அமைச்சர்களான அநுரபண்டாரநாயக்க, மிலிந்த மொறகொட, ஆறுமுகன் தொண்டமான் மற்றும் பிரதி அமைச்சர்கள் சிலரும் நேற்றைய தினம் சபைக்கு சமுகமளித்திருக்கவில்லை.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபை ஆரம்பித்து இடைநடுவிலேயே தனது ஆசனத்திற்கு வந்து அமர்ந்து கொண்டார். பத்து நிமிடம் கூட ஆசனத்தில் அமர்ந்திருக்காது எழுந்து சென்ற ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரை நிகழ்த்தி முடியும் வரை சபைக்குள் வரவில்லை.

வரவு செலவுத்திட்ட உரையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் பகிஷ்கரித்தமையால் அவர்களின் ஆசனங்கள் அனைத்தும் வெறுமையாக இருந்தன.

இதேவேளை வரவு செலவுத்திட்ட உரை நிகழ்த்தி முடிபடைந்ததும் அரசாங்கம் வழங்கிய தேநீர் விருந்துபசாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி கலந்து கொள்ளவில்லை.

ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் விருந்துபசாரத்தில் கலந்து கொண்டன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு ஏற்பாட்டாளர் மங்கள சமரவீர, இணைப்புச் செயலாளர் சிறிபதி சூரியாராட்சி ஆகியோர் சபைக்கு சமுகமளித்திருந்த போதும் தேநீர் விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளவில்லை. (ச)

## பழைய பஞ்சாங்கமே புரட்டப்பட்டுள்ளது-ஜே.வி.பி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் மக்களுக்கு எதுவித சலுகைகளும் வழங்கப்படவில்லை. அபிவிருத்திக்கான திட்டங்களும் இதிலில்லை மொத்தத்தில் பழைய பஞ்சாங்கத்தினை மீண்டும் அரசாங்கம் புரட்டியுள்ளது என்று ஜே.வி.பியின் எம்.பி விஜித கேரத் தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்டம் குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எதுவிதமான சலுகைகளும் முன்வைக்கப்படவில்லை. அபிவிருத்தித்திட்டம் தொடர்பாகவும் நிச்சயித்த யோசனைகள் உள்ளடக்கப்படவில்லை. அதாவது பழைய பஞ்சாங்கமே புரட்டப்பட்டுள்ளது என்றார் அவர். (ச)

## இனப்பிரச்சினைக்கு அரசியல்...

பிடியில் இருந்து தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களையும் விடுவிப்பதிலும் ஈடுபட்டுள்ள எமது பாதுகாப்பு படையினரால் ஈட்டப்பட்ட முன்னேற்றங்களுக்கு இணையாக வடக்கிலும் அதேபோன்று கிழக்கி லும் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களினால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளுக்கு விசேடமாக அரசியல் தீர்வுகளை காணும் அரசியல் செயற்பாட்டில் நாம் ஈடுபட்டே தீர வேண்டும். பயங்கரவாதத்திற்கு எதிரான போர் தமிழ் மக்களுக்கு எதிரான போர் அல்ல என்பதனை வலியுறுத்தி கூறவிரும்புகின்றேன்.

இத்தீவின் அனைத்து பாகங்களிலும் உள்ள தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாத்து பேணுவது எமது கடமையும் பொறுப்புமாகும். ஆகவே எமது தாய்நாட்டின் நலன் கருதி இப்பொதுவான நிகழ்ச்சி நிரலை நோக்கி பயணிக்க அரசாங்கத்துக்கு கைகொடுக்குமாறு எதிர்க்கட்சியிலுள்ள உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன் என்றார். (ச)

## முகமாலை முதல் கிளாலி...

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார இத் தாக்குதல் பற்றிக் கூறுகையில், அதிகாலை 5.30 மணியளவில் இராணுவத்தினர் விடுதலைப்புலிகளின் பிரதேசத்தை நோக்கி முன்னேறிச் சென்று அவர்களது முன்னரங்க பகுதிகளைக் கைப்பற்றி புலிகளின் ஆறு பதுங்குகுழிகளை அழித்தனர்.

அங்கிருந்து 5 கிலோ மீற்றர் தூரம் வரையில் முன்னேறிச் சென்று சேதங்களை ஏற்படுத்திவிட்டு காலை 7 மணியளவில் படையினர் தமது நிலைகளுக்கு திரும்பியுள்ளார்கள் என்று கூறினார்.

கிளாலி முதல் முகமாலை வரையிலான பகுதிகளில் ஏ-9 வீதிக்கு வடக்காகவும் தெற்காகவும் இந்த சண்டைகள் நடைபெற்றன. இதில் 52 விடுதலைப்புலிகளும் 11 இராணுவத்தினரும் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

மேலும் 41 படையினர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என உதய நாணயக்கார தெரிவித்தார்.

அதே நேரம் இந்த மோதல் சம்பவம் குறித்து தகவல் வெளியிட்டுள்ள விடுதலைப் புலிகளின் இராணுவத்துறைப் பேச்சாளர் இளந்திரையன், கிளாலி முதல் முகமாலை வரையிலான பகுதிகளில் நேற்று இராணுவத்தினர் பெரும் எடுப்பில் மேற்கொண்டுள்ள முன் நகர்வு முயற்சியானது விடுதலைப் புலிகளினால் முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது 20 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்துள்ளதாகவும் தங்கள் தரப்பில் விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த சண்டையின் போது இராணுவத்தினருக்கு உலங்கு வானூர்தி ஒன்றும் உதவியாக தாக்குதலில் ஈடுபட்டதாகவும் இராணுவத்தின் டி-55 ரக யுத்த டாங்கி ஒன்று தங்களால் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இராணுவத்திடம் இருந்து பெருமளவு இராணுவத் தளபாடங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்றைய மோதலில் கொல்லப்பட்ட படையினரில் 18 பேரின் சடலங்கள் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. காயமடைந்த 86 படையினர் கொழும்பு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 29 பேர் கொழும்பு தேசிய மருத்துவமனையிலும் 48 பேர் ஜெயவர்த்தனபுர மருத்துவமனையிலும் மூன்று பேர் கண் நோய் மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஆறு பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

## அதிக பாதுகாப்புச் செலவுடன் கூடிய...

இலங்கையில் கடந்த இரண்டு வருடகால பொருளாதார வளர்ச்சி வீதம் மொத்தம் உள்நாட்டு உற்பத்தியில் 7 சதவீதமாக காணப்படுவதாக தெரிவித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த வருடம் இந்த வளர்ச்சி வீதத்தினை 7.5 வீதமாக உயர்த்த சகலரினதும் ஒத்துழைப்பினையும் கோரினார்.

வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இக் கோரிக்கையை முன்வைத்தார். நாட்டின் தேசிய பாதுகாப்பினை பேணுவதில் தனது அரசுக்கு உண்டான தீவிர கவனத்தினை வெளியிட்டுப்பேசிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வினைக் காணுவதற்கு முன்பாக நாட்டில் உள்ள பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படுவது இன்றியமையாதது என்றும் தெரிவித்தார்.

இந்த வரவு செலவுத்திட்டத்தினை ஒரு யுத்த வரவு செலவுத்திட்டம் எனக் குற்றம் சாட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சபையை புறக்கணித்திருந்தார்கள்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வரும் ஆண்டில் 7.5 சதவீதம் இருக்கும் என்று இந்த வரவு செலவுத்திட்டத்தில் மதிப்பிடப்பட்டிருக்கிறது. வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய விபரங்கள் வருமாறு;

*பெற்றோலுக்கான வரி அடுத்த வருடத்தில் குறைப்பு*

எரிபொருள் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தி மக்களுக்கு நிவாரணம் வழங்கும் யோசனையும் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கமைய டீசல் மற்றும் மண்ணெண்ணெயின் விலைகள் அதிகரிக்கப்படமாட்டாது. பெற்றோலுக்காக தற்போது அறவிடப்படும் 15 சதவீத வரி அடுத்த வருடம் முதல் ஐந்து சதவீதமாகக் குறைக்கப்படும். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 100 ரூபா பெறுமதியான மண்ணெண்ணெய் உதவித் தொகையாக வழங்கப்படும்.

*கூட்டுறவுத் துறைக்கு வரிவிலக்கு*

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு கூட்டுறவுத்துறை வலுப்படுத்தப்படும். கூட்டுறவு அல்லது லக்சதொச ஆகியவற்றின் மூலம் குறைந்த வருமானம் பெறுவோருக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய உணவுப் பொதிகள் விநியோகிக்கப்படவுள்ளன.

நாடுபூராகவும் உள்ள 300 பிராந்திய கூட்டுறவு நிலையங்கள் லக்சதொசவுடன் இணைக்கப்பட்டு நவீனமயப்படுத்தப்படவுள்ளன. அத்துடன் லக்சதொச நிறுவனங்களின் எண்ணிக்கை 200 ஆக அதிகரிக்கப்படும். லக்சதொச மற்றும் பட்ஜட் சொப்களை புதிதாக ஆரம்பிப்பதற்கு 65 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

கூட்டுறவுத்துறை மறுசீரமைக்கப்படுவதுடன் தற்போது காணப்படும் கடன்கள் மற்றும் வட்டிகள் என்பனவும் நீக்கப்படவுள்ளன. கூட்டுறவுத்துறைக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. கிராமிய வங்கிகளை வரிகளுக்கு உட்படாத நிறுவனங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

*தோட்டத்துறை மக்களுக்கு சலுகை*

தோட்டத்துறை மக்களுக்கு அரிசி, கோதுமைமா மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை சலுகை விலையில் வழங்குவதற்கு இம் முறை வரவு செலவுத்திட்டத்தில் 20 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு சலுகை விலையில் பொருட்களை விற்பனை செய்வதற்காக தோட்டப்புறங்களில் லக்சதொச நிலையங்கள் அமைக்கப்படும்.

*மீனவர்களது உற்பத்திகளுக்கு உத்தரவாத விலை*

மீனவர்களுக்கு இம் முறை வரவு செலவுத் திட்டத்தில் பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களது உற்பத்திகளை உத்தரவாத விலையில் பெற்றுக் கொள்வதற்கு கடற்றொழில் கூட்டுத்தாபனம் ஏற்கனவே நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. அவை தொடர்ந்தும் பேணப்படும்.

*ஒரு லீற்றர் பாலிற்கான உத்தரவாத விலை 40 ரூபா*

ஒரு லீற்றர் பாலிற்காக வழங்கப்படும் உத்தரவாத விலை 30 ரூபாயிலிருந்து 40 ரூபா வரை அதிகரிக்கப்படும். பால் உற்பத்திகளை அதிகரிப்பதற்கு இம் முறை வரவு செலவுத் திட்டத்தில் பல ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. பால் உற்பத்திக்கிராமங்களை ஆரம்பிப்பதற்கும் உயர் ரக பசுக்களை இறக்குமதி செய்வதற்கும் ஊக்குவிப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

*பசுக்கொலைக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம்*

பசுக்கள் கொல்லப்படுவதை தடுப்பதற்கான சட்டங்கள் வலுப்படுத்தப்படும். இதற்காக விதிக்கப்படும் அபாராதத் தொகை 2 ஆயிரத்து 500 ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாவரை அதிகரிக்கப்படும்.

*புலமைப்பரிசில் எண்ணிக்கை 15 ஆயிரமாக அதிகரிப்பு*

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகள் மேலும் அதிகரிக்கப்படும். 5ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் எண்ணிக்கை 10 ஆயிரம் முதல் 15 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்களின் பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடை என்பன வழங்கப்படுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளன.

*வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு அதிகரிப்பு*

அரசாங்க ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுக்கொடுப்பனவு தொடர்ந்தும் வழங்கப்படும். அடுத்த ஜனவரி மாதம் முதல் இந்தக் கொடுப்பனவு 2 ஆயிரத்து 500 ரூபாவரை அதிகரிக்கப்படும். யூன் மாதம் முதல் இத் தொகை 2ஆயிரத்து 775 ரூபாவாக அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களுக்கான இடர் கடன்களை வழங்குவதற்கு 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

*15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு*

அடுத்த வருடம் 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச துறையில் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும். தேசிய கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கு இம்முறை பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இரத்தினக் கல் மற்றும் தங்க ஆபரணம் போன்ற தொழில் துறைக்கு வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

*புடைவைக் கைத்தொழிலுக்கு வரிச்சலுகை*

உள் நாட்டு புடைவைக் கைத்தொழிலுக்கும் வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது. இதன் கீழ் நூல் வகைகளை இறக்குமதி செய்வதற்காக அறவிடப்படும் வற் வரியும் நீக்கப்படும். சுதந்திர வர்த்தக வலயங்களில் தொழில் புரியும் ஊழியர்களின் நன்மை கருதி பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான போக்கு வரத்து வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன.

*பெருந்தெருக்கள் அபிவிருத்தி*

பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை முதலீட்டுச் சபை நிதி உதவி வழங்கவுள்ளது. வரிக்கட்டமைப்பை எளிதாக்கும் ஆலோசனையும் இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதற்காக நிலுவை வரி அறவிடுவதற்கு நிலையான திட்டம் ஒன்றை முன்வைக்கப்படுவதுடன் அதற்கான விசேட சட்டமூலம் ஒன்றும் சமர்ப்பிக்கப்படும்.

கடந்த மார்ச் 31 ஆம் திகதி அளவில் நிலுவை வரியை அறவிடக்கூடிய உண்மையான பெறுமதியை நிர்ணயிற்பதற்கு 3 பேர் அடங்கிய சுயாதீன ஆணைக்குழு நிறுவப்படும்.

இந்தக் குழுவின் அனுமதிக்கு அமைய அரச நிறுவனங்கள் அல்லது நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் என்பவற்றின் வரியை நீக்குவதற்கு ஆலோசனை வழங்கப்படும்.

*படையினரின் சேம நலனுக்காக நிதியம்*

நிலுவை வரி மூலம் அடுத்த வருடத்தில் 500 கோடி ரூபா பெறப்படவுள்ளது. இராணுவ வீரர்களின் குடும்பங்களின் சேம நலனுக்காக விசேட வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். இதற்கென நிதியம் ஒன்றும் ஆரம்பிக்கப்படும்.

இந்த நிதியத்திற்கு சகல வரிகளில் இருந்தும் சலுகை வழங்கப்படும். இராணுவ வீரர்களின் குடியிருப்புப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு 75 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

*மதுபானம், சிகரட் விலை, அதிகரிப்பு*

மதுபானம் ஒருபோத்தல் 35 ரூபாயாலும் சிகரட் ஒன்று இரண்டு ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 770 கோடி ரூபா வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது. விவசாயத் துறை அபிவிருத்திக்கு இம் முறை வரவு செலவுத்திட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

உள் நாட்டு உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்வதற்கு அதிக கவனம் செலுத்தப்படும் எனவும் ஜனாதிபதி தனது நீண்ட உரையின் போது தெரிவித்தார்.

*கிழக்கு மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுத் திட்டம்*


கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட மனித நேய இராணுவ நடவடிக்கையின் அதி உச்ச பயன்பாடுகளை மக்கள் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. மக்களுக்கான அடிப்படை வசதிகள் மற்றும் வீடமைப்பு நடவடிக்கைகள் என்பவற்றுக்காக வெளிநாட்டு உதவிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தனியார் துறையினரை ஊக்குவிக்கும் வகையில் 50 மில்லியன் ரூபாவுக்கு அதிக தொகையை முதலீடு செய்து 50 இற்கு மேற்பட்டோருக்கு தொழில் வழங்கும் நிறுவனங்களுக்கு 5வருட வரிவிலக்கு அளிக்கப்படும்.

அவ்வாறான முத லீடுகளுக்காக வங்கிகளிடம் இருந்து பெறப் படும் கடன்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் இயந்திரங்கள் என்பவற்றுக்கு வருமான வரி நீக்கப்படும். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.11.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

# உதயன் தீபாவளிச் சிறப்பு மலர் - 2007

## பிரார்த்தனை ஒன்றே சாந்தி தரும்



இன்று தீபாவளித் திருநாள். இது இந்துக்களின் முக்கிய பெருநாள்களில் ஒன்று. இன் றைய நாளில் புத்தாடை அணிந்து சுவாமி தரிசனஞ் செய்து இனிப்புப் பலகாரங்கள் உண்டு உறவினர் நண்பர்களுடன் சந்தோசம் கொண்டாடுவது வழமை.

துன்பத்திலும் துயரத்திலும் மூழ்கிக் கிடந்த மக்களை கிருஷ்ணபரமாத்மா துஷ்ட நிக்கிரக இஷ்ட பரிபாலனஞ் செய்யும் ரீதியில் நரகாசுரனை அழித்து ஒழித்துவிட்டு ஆதரவு காட்டியதாக இதிகாசம் கூறும்.

ஆகவே, இந்தத் தீபாவளியில் அனைத்து மக்களும் அல்லல் நீங்கி ஆண்டவன் அருளால் மகிழ்வுடன் இருக்க வேண்டும் என்று விரும் புகின்றோம்.

இன்று மக்கள்படும் இன்னல்கள், அவலங்கள், கஷ்டங்கள் சொல்லுந்தரமன்று. அவற்றிலிருந்து எப்போது மீள இயலும் நிம்மதியாக வாழ முடியும் என்ற ஏக்கமே எல்லோர் மனங்களிலும் பரவி உள்ளது.

இன்றைய ஏக்கத்தில் இருந்து விடுபடுவதற்கு- மன அமைதி பெறுவ தற்கு- பிரார்த்தனை பெரிதும் கைகொடுக்கும்.

எங்களுக்காக' என்று தனியாக அன்றி எல்லோருக்குமாக ஒவ்வொருவரும் செய்யும் பிரார்த்தனை கூட்டுமொத்தப் பயனைத் தரும். பிரார்த்த னையின் பலம் அசுரபலத்தையும் விடச் சக்தி வாய்ந்தது. அதுவே சாந்தி தரவல்லதாகும்.

தீபத் திருநாளில் நாம் ஒவ்வொருவரும் இதனை மனதில் இருத்தி நாளாந்தம் பிரார்த்தனையில் ஈடுபடுவோமாக.

எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமான் சூரபன்மனை அழித்துத் தேவர்களைக் காத்தருளியது போல் காக்க வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

தீபத்திலிருந்து ஒளி பிறப்பது போல் தமிழ்மக்களுக்கும் வெளிச்சம் வர வேண்டும் என வந்தித்துச் சிந்தித்துச் சேவித்து நிற்கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.



## மனித மனங்களில் சமாதானமே எங்கும் பரவட்டும்

இருளைப் போக்கி இல்லங்களில் மங்கலத்தை ஏற்படுத்துவதே தீபாவளிப் பண்டிகையின் நோக்கம். வானாகி ,மண்ணாகி ,வளியாகி 'ஒளியாகி' என்று பாடுகிறார் மாணிக்கவாசகர். ஒளி வடிவானவன் இறைவன், தீபமங்கள நமோநம என்கிறார் அருணகிரிநாதர். அஞ்ஞானம் என்ற இருட்டிலிருந்து ஞானம் என்னும் வெளிச்சத்திற்கு வருவதைத் தான் பெரியோர்கள் இப்படிப் பாடியுள்ளனர். அதர்மத்தை அழித்து தர்மத்தை நினைவு கூறும் நாளே தீபாவளி.

**மக்களைக் காக்க எடுத்த அவதாரம்**

நரகாசுரனுடைய துர்குணத்தையும், தீய எண்ணத்தையும் அவன் செய்த இன்னலைப்போக்க வேண்டித்தான் கிருஷ்ண பரமாத்மா அவனை ஸம்ஹாரம் செய்தார். ஆக மக்களின் துயர் நீக்கும் திருநாளே தீபாவளி. மக்கள் யாவரும் நலமாக இருக்க வேண்டி எடுத்த அவதாரமே கிருஷ்ணாவதாரத்தில் தீபாவளிப் பண்டிகை மிக முக்கிய அங்கம் வகிக்கிறது. மனிதனுக்கு காமமும் குரோதமும் கூடாது. பேராசையும், துர்க்குணமும் கூடாது என்பதை இந்த தீபாவளி நரகாசுரவதத்தின் மூலம் உணர்த்துகிறது. பண்டிகையின் உற்சாகத்தில் மேற்கண்ட குணங்கள் இனிமேல் இருக்கக் கூடாது என்பதை வேண்டுதலாக பிரார்த்திக்க வேண்டும். இவ்வாறு பிரார்த்திப்பதே உண்மையான தீபாவளியின் நோக்கம்.

இந்தத் தீபாவளித் திருநாளில் பாழாய்ப்போன ஆசைகளையெல்லாம் பட்டாசாய் கொளுத்திடுவோம். போட்டி, பொறாமை, வஞ்சகம் இவற்றை தீயிலிட்டு எரித்திடுவோம். தீவிரவாதம் - இதை வெடியால் வெடித்திடுவோம். மனித மனங்களில் மங்களம் பிரகாசிக்கட்டும் எங்கும் 'சமாதானஒளி பரவட்டும்'.

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்,**
பிரதமகுரு, வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன்
தேவஸ்தானம் , வல்வெட்டித்துறை.

## துன்ப இருள் நீங்குவதாக

தொன்மைச் சிறப்புமிக்க இந்து மதத்தின் முக்கியத்துவம் வாய்ந்த திருநாளாகிய தீபாவளி வாழ்வில் இருளை நீக்கி ஒளியைக் கொடுக்கும் வகையில் சிறப்புப் பெறுகின்றது. நாட்டின் இன்றைய கால கட்டத்தில் வரும் தீபாவளி நம்நாட்டு தமிழ் மக்களுக்கு எந்த வகையிலும் குதூகலத்தை வழங்கப்போவதில்லை. அவர்கள் அனுபவித்து வரும் துன்ப துயரங்களும் இன்னல்களும் இழப்புகளும் வார்த்தைகளால் சொல்ல முடியாதவை.

இத்தகைய துரதிர்ஷ்வசமான நிலையில் கேளிக்கைகள் விழாக்களுடன் தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவதும் பரஸ்பரம் வாழ்த்துக்களைப் பரிமாற்றி கொள்வதும் எவ்வகையிலும் பொருத்தமானதாகத் தெரியவில்லை.

இன்னல்களும் அவலங்களும் இடம் பெயர்வுகளுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கம் நம்நாட்டு தமிழ் மக்களுக்கு- நமது உடன்பிறப்புகளுக்கு விமோசனமும் வாழ்வில் நிம்மதியும் மகிழ்ச்சியும் வேண்டி இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டிய நாளாக தீபாவளித் தினத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

காலத்துக்குக் காலம் பல்வேறுபட்ட துயரங்களை அனுபவித்ததன் ஊடாக சொல்லொண்ணா வேதனையால் வாடும் எங்கள் தமிழ் மக்களது வாழ்வுடன் இணைந்திருக்கும் துன்ப இருளானது விரைவில் நீங்கி அவர்களுக்கு ஒளிமயமானதொரு எதிர்காலம் உதயமாகவேண்டும் என அகிலஇலங்கை இந்து மாமான்றம் பிரார்த்திக்கின்றது.

**அகில இலங்கை இந்து மாமன்றம்.**

## அனைவருக்கும் இனியவைசெய்வோமாக



பண்டிகைகளும் விழாக்களும் மக்கள் வாழ்வைப் புனிதப்படுத்துவன. ஒருவருக்கொருவர் உதவுதல், விருந்தினர்களை உபசரித்தல், புத்தாடைஉடுத்தல், குழந்தைகளை இனிப்புப் பண்டங்கள் கொடுத்து மகிழ வைத்தல், ஏழைகள் அனாதைகளுக்குக் கருணை காட்டுதல் ஆகியவை விழாக்களின் நோக்கமாகும். இதனால் என்றும் இன்பம் பெருகும் இயல்பு எமது உள்ளத்தில் ஏற்படும் . கொடுஞ் செயல்களைச் செய்து பலகாலம் மகிழ்ச்சியடைந்தவன் நரகாசுரன். இந்த நிலையில் கொடுமைகளை ஒழித்து நன்மைகளைச் செய்யவேண்டும் என்று அவனுடைய இறுதிக்காலத்தில் இறைவனால் உணர்த்தப்பட்டது. நல்வழிக்குத் திரும்பிய அவன் தான் மறையும் நாளை மக்கள் மகிழ்ச்சியாகக் கொண்டாட வேண்டும் என்று வரம் கேட்டான். அந்தத் தினமே தீபாவளியாக மலர்கிறது. இத்தினத்தைக் கொண்டாடுவதன் மூலம் அனைவருக்கும் இனியவை செய்து உய்தியடைவோமாக.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை

## அன்பும் அறனும் உண்மையும் வாழ்வில் ஆதாரங்களாக நிலைக்கட்டும்



இந்துக்களின் இனிய விழாக்களிலே தீபாவளித் திருநாள் முதன்மையானது. அறம் வெல்லும் என்ற அரியகருத்தினை இந்நாள் அனைவர்க்கும் போதிக்கின்றது. இருளில் இருந்து இவ்வுலகம் விடிவு பெற்ற நாளாக இந்நாளை எம்முன்னோர் கருதுவர்.

இந்நாளில் இறை வழிபாட்டுக்கு முதன்மை கொடுப்பது எமது பாரம்பரியமாகும். நாம் செய்த தவறுகளுக்காக இறைவனிடம் மற்றாடுவதனையும் இனிமேல் நாம் நேர்த்தியாக வாழ்வதற்கு இறையருளை வேண்டுவதனையும் வழிபாட்டின் முதன்மை அம்சமா கக் கொள்ள வேண்டும்.

எங்கள் மண்ணில் அனைவரும் அச்சமின்றி அவலமின்றி அனுதினமும் அகமகிழ்ந்த வாழும் வழி கிடைக்க வேண்டும் என அனைவரும் பிரார்த்திப்பது அவசியமாகும். எம் வாழ்வில் எமக்குக் கிடைத்த நன்மைகள் அனைத்துக்காகவும் இறைவனுக் கும் எம்மை ஆளாக்கியவர்களுக்கும் எமக்கு உதவியவர்களுக்கும் இந் நாளில் நன்றி சொல்வோம்.

ஏழ்மையால், நோயினால், பிரிவுகளினால் நொந்துபோய் இருப்பவர்களுக்கு கருணை உள்ளத்தோடு ஆறுதல்.செய்ய முற்படுவோம். நல்லதையே நினைப்போம். இனிமேல் நடப்பவையாவும் நல்லவனாக நடந்தேற வேண்டுமென்று இறைவனைத் துதிப்போம்.

அன்பு, பண்பு, கருணை, அறம், உண்மை என்ற வார்த்தைகள் எம் வாழ்வின் ஆதாரங்களாக நிலைக்கட்டும். மனம் தளராது அனைவரும் மகிழ்வோடு வாழ இந்நாளை வரவேற்றுக் கொள்ளுங்கள். இடர் நீங்கி அனைவரும் இன்புற்று வாழ இனிய வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் கூறி இறைவனை இறைஞ்சுகிறேன்.

**செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்.**

## இந்துமத குருமார் ஒன்றியத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

சர்வசித்து வருடம் நிரம்பிய இத்தீபாவளி நன்நாளுடன் அனைத்து மக்களும் எதிர்பார்க்கும் சாந்தி, சமாதானம் மலரவும், மக்கள் படும் துன்பங்கள், கஷ்டங்கள் நீங்கி அனைவரும் நிம்மதியான வாழ்வு வாழவும் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அனைத்து அன்புள்ளங்களுக்கும் தீபாவளி வாழ்த்துக்களும் ஆசிகளும் கிடைப்பதாகுக!

''லோகா சமஸ்த்தா சுகினோ பவந்து''
''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க''

- ப.மனோகரக் குருக்கள்

## மலர்க தீபாவளியே!

எத்தனை பண்டிகை வந்திடினும்
ஏக்கங்கள் தீருமோ மகிழ்ந்திருக்க
இத்தரை காணும் அவலங்கள்
எத்தனை கலம் எதிரொலிக்கும்
சித்தப் பிரமையில் பித்தராகி
எந்தப் பிடிப்புமிலா ஏக்கத்திலே
நித்தமும் வாடிடும் எம்மவர்கள்
நிம்மதி கண்டிட மலர்க தீபாவளியே!

- அல்வாயூர் சி.சிவநேசன்

## தீர்வினைத்தா தீபாவளியே!

தேசத்தின் இருளகற்று தீபாவளியே
தேடுகின்ற உரிமையைத்தா தீபாவளியே
நாசத்தை ஒழித்துவிடு தீபாவளியே
நமக்கொரு விடிவைத்தா தீபாவளியே
மோகத்தைக் கொன்றுவிடு தீபாவளியே
மோதலை நிறுத்திவிடு தீபாவளியே
ஆபத்தை போக்கிவிடு தீபாவளியே
அடிமையை நீக்கிவிடு தீபாவளியே
தீபத்தை ஏற்றிவிடு தீபாவளியே
தீர்வினைத் தந்துவிடு தீபாவளியே
பாவத்தை தீர்த்துவிடு தீபாவளியே
பாதையைக் காட்டிவிடு தீபாவளியே
சோதனை ஒழித்துவிடு தீபாவளியே
சுதந்திரம் தந்துவிடு தீபாவளியே
சாதனை செய்துவிடு தீபாவளியே
சாந்தத்தைத் தந்துவிடு தீபாவளியே

- காரை எம்.பி. அருளானந்தன்.

மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களுக்கு ஓர் நன்மை

தீப ஒளி வீசிடும் தீபாவளி நன்நாளில் வாடிக்கையாளருக்கு வாழ்த்துக்களைக் கூறுகின்றோம்

Valvoline MOTOR OILS

★ 4000 Km வரை பாவிக்கக் கூடியது.
★ TVS, Bajah, LML மோட்டார் கம்பனிகளின் அங்கீகாரம் பெற்றது.
★ இஞ்சினுக்கு சிறந்த பாவனையைக் கொடுக்கிறது.
மற்றும் Valvoline Forkoil விற்பனைக்கு உள்ளது.
எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முகவர்களுக்கு
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

TVS ஜப்பான், சைனா 49CC மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பற்றரிகள், அசிட்கான்கள், ஹெல்மட் வகைகள், உதிரிப்பாகங்கள் என்பன மொத்தமாகவும் சில்ல றையாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

TVS




ஏக விநியோகஸ்தர்கள்: யசோ மோட்டோர்ஸ் 163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன் தீபாவளிச் சிறப்பு மலர் - 2007

## நிம்மதியான வாழ்வுக்காக எல்லோரும் பிரார்த்திப்போம்

விண்ணுலக தேவர்களையும் மண்ணுலக மாந்தர்களையும் கொடுமைப்படுத்தி கொடுங்கோல் ஆட்சி புரிந்தான் நரகாசுரன். துஷ்டர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு காத்தற் தெய்வமாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் அசுரனை அழித்தார். அவன் இறக்கும் போது தனது தவற்றை உணர்ந்தான். தான் இறந்த தினத்தை அனைவரும் மகிழ்வுடன் கொண்டாட வேண்டும் என்று பகவானை வேண்டிக் கொண்டான். பகவானும் அவ்வாறே ஆகட்டும் என கூறி தவறை உணர்ந்த அசுரனுக்கு நற்கதி அளித்தார். இந்த நாளையே நாம் தீபாவளிப் பண்டிகையாக கொண்டாடுகின்றோம்.

இந்து சமயத்தவரின் இப்பண்டிகை தற்போது இன, மத வேறுபாடின்றி பலராலும் விரும்பி கொண்டாடப்படும் சிறப்பினைப் பெற்றுள்ளது. நாள் முழுவதும் ஓய்வின்றி உழைக்கும் மக்களுக்கு இவ்வாறான பண்டிகை நாள்கள் மனமகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் ஊட்டுகின்றன. ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடின்றி அனைவரும் புத்தாடை அணிந்து பலவகை பட்சணங்களையும் பகிர்ந்து பேதங்களை மறந்து தீபாவளியை வரவேற்கின்றனர்.

தற்போதுள்ள நாட்டின் சூழ்நிலை, விலைவாசி உயர்வு, தொழிலின்மை, நிம்மதியற்ற பதற்றமான வாழ்க்கை இவை காரணமாக இலங்கையில் வாழும் தமிழர்கள் எவருமே மனநிறைவோடும் மகிழ்ச்சியோடும் தீபாவளியை கொண்டாடுவார்களா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும். வருடந்தோறும் பண்டிகைகளும் விழாக்களும் வந்து செல்கின்றன. நமது வாழ்க்கை கேள்விக்குறியான நிலையில் உள்ளது. இந்தத் திருநாள்களில் நாம் செய்யக்கூடியது எமக்கு மேல் உள்ள இறைசக்தியை வழிபட்டு எமது எதிர்கால சந்ததிகளாவது மனநிறைவோடு இப் பண்டிகைகளைக் கொண்டாடி நிம்மதியான வாழ்வு வாழ அருள வேண்டும் என்று பிரார்த்திப்பதைத் தவிர வேறு வழியில்லை. எனவே எல்லோரும் ஒன்றுபட்டு ஒருமனதாக இறைவனை வழிபட்டு நிம்மதியான வாழ்வு கிட்டப் பிரார்த்திப்போமாக.

ஸ்ரீவத்ஸ வ.இராஜேஸ்வரக் குருக்கள்,
ஸ்ரீ வேங்கடேச வரதராஜர் பெருமாள் தேவஸ்தானம்,
வண்ணை - யாழ்ப்பாணம்.

## அசுர குணங்கள் அழிந்து மனதில் நல்ல குணங்கள் மலரும் நாள்

இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளில் தீபாவளி முக்கியமானது. சைவர்களும் வைஷ்ணவர்களும் சிறப்பாகக் கொண்டாடுவர். 'துலாம் மாச மகாத்மியம்' என்னும் நூல் தீபாவளி ஐப்பசி மாதத்து தேய்பிறைச்சதுர்த்தசியில் கொண்டாடப்பட வேண்டுமெனக் கூறுகிறது. இந்த மாதத்தில் சூரியன் துலாம் ராசியில் வசித்து வருவது சிறப்பாகும்.

தீபங்களை வரிசையாக ஏற்றி வழிபடுவது தீபா வளி எனப்படும். இந்நாளில் மனிதனுடைய அகத்திலுள்ள அசுர குணங்கள் அழிந்து, மனித குணங்கள் மலரும். இதனால் வீட்டிலும் நாட்டிலும் இன்பம் மலரும். இதனையே நரகாசுரன் கதையும் விளக்குகிறது. நரகாசுரன் என்பதில் 'நரன்', 'அசுரன்' என இரு சொற்கள் உண்டு. நரன் என்பது மனிதத் தன்மை பொருந்தியது. அசுரன் என்பது தீய குணங்கள் பொருந்தியது. திருமாலால் நரகாசுரன் அழிக்கப்பட்டு அருளப்பட்டான் என்பது, அவனது உள்ளத்திலிருந்த அசுரகுணங்கள் அழிந்து மனித குணங்களைத் திருமால் மலரச் செய்தார் என்பதாகும். இத்திருநாளே இந்துக்களால் தீபாவளியாகக் கொண்டாடப்பட்டுவருகிறது.

நாமும் எம்மினத்தவரிடையே காணப்படும் அராஜகங்கள், அடக்குமுறைகள், அநீதிகள், தலைக்கனங்கள் அனைத்தும் அடியோடு அழிந்துபோக வேண்டும் எனவும், மனிதகுணங்கள் மலர வேண்டும் எனவும் இத்தீபாவளித்திருநாளில் பிரார்த்திப்போம்.

-என்.பி.ஸ்ரீந்திரன்.

இன்பத் திருநாளாம் தீபாவளி நன்நாளில்
அனைவருக்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள்...




உங்கள் முன்னேற்றத்தில் நிதித் தேவைகளின் பங்காளியாக
31 வருடங்களாக யாழ். மண்ணில் சேவையாற்றி வரும் நாம்

- நிலையான வைப்புகளிற்கு அதியுயர் வட்டி வீதம்
- உயர் வட்டியுடன் சாதாரண மற்றும் சிறுவர் சேமிப்புக் கணக்குகள்
- வாகனம், வீடு, காணி கொள்வனவுகளுக்கான இலகுமுறை கடன் வசதிகள்
- வீடு கட்டுதலுக்கான கடன் வசதிகள்
- வெளிநாட்டு உயர் கல்விக்கான கடன் வசதி
- பண வைப்புக்களுக்கான விரைவான கடன் வசதிகள்

இவற்றுடன் மேலும் பல சேவைகளை வழங்கும்
ஒரே ஒரு தனியார் நிதி நிறுவனம்.

உங்கள் வெற்றியே எங்கள் இலக்கு!
த பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
173, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
www.thefinance.lk

தொ.பே.இல.: 021 - 222 6256 Fax: 021-222 2310

இல.36, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.இல. 021 226 4170

இல.19, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
தொ.பே.இல. 021 222 2035



பற்களில் பழுதுண்டா? விழுந்து விட்டனவா? முன்பை விட உறுதியான அழகான வெண் சங்குப் பற்களைக் கட்டிட இளைய தலைமுறைகளே மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பை பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புக்களை பொருத்திட
யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம் மூக்குக் கண்ணாடி
அகமும், பல்கட்டும் மும் 564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.2486.
கிளைகள்
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக இல.80, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.

### தீபம் ஒளிரட்டும்

தீபம் ஒளிரட்டும்
தீயகுணம் ஒழியட்டும்
தாபம் தணியட்டும்
தார்மிகம் ஓங்கட்டும்
நீதி நிலைக்கட்டும்
நெருக்குதல் நீங்கட்டும்
போதி மரத்தேவன்
போற்றும் தருமங்கள்
நாட்டில் நிலைத்தோங்கும்
நாளும் பிறக்கட்டும்

- தருமன்.


எமது அன்பர்கள், நண்பர்கள்,
ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இனிய
தீபாவளி நல்
வாழ்த்துக்கள்!

நவநாககரிகமான ஆடைத்தெரிவுகளுக்கு நம்பிக்கையோடு நாடுங்கள்:
லைடன் புடைவை நிலையம்
இல.410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 238




எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளித் திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணி நேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் மற்றும் உள்ளூர், வெளியூர் தொலைத் தொடர்பு வசதிகள், லெமனேற்றிங், பிறின்ரிங், கிறபிக்ஸ் டிசைனிங், கணனி உதிரிப்பாகங்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்ந்து மூன்று தினங்களுக்கு எமது நிறுவனத்தின் அனைத்து சேவைகள் மற்றும் விற்பனைகள் எங்குமே காணாத விலைக்கழிவுகளுடன்
WESTERN UNION
லண்டனுக்கு அனுப்பப்படும் 5 கி.கி. பொதிகளுக்கு மிகக்குறைந்த கட்டணம்
FedEx Express
நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்



யாழ். குடாநாட்டிலிருந்து உலகின் எந்தப் பாகத்திற்கும் கடிதங்கள் மற்றும் பொதிகளை மிக விரைவாக அனுப்பிட

சகல விதமான கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் கணனிகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7835 (ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ் முன்பாக)
46.ஆடியபாதம் வீதி. திருநெல்வேலி. தொ.பே. 021 222 7310 (நல்லூர் ப.நோ.கூ. சங்கம் முன்பாக)

# உதயன் தீபாவளிச் சிறப்பு மலர் - 2007



உதயன் தீபாவளிச் சிறப்பு மலர் - 2007

# அக, புற இருளைப் போக்கி ஒளிதரும் தீபாவளி!

ஆண்டு தோறும் எவ்வித தராதர பாகுபாடுமின்றிக் கொண்டாடப்படும் பண்டிகை தீபாவளி என்று கூறினால் அது மிகையாகாது. இந்தப் பண்டிகை மிகவும் பழமை வாய்ந்த தொரு பண்டிகையாகும்.

தீபாவளி ஐப்பசி மாதத்தில் அமாவாசையை ஒட்டிய தினத்தில் வந்து புற இருள் போக்கி அக இருளையும் நீக்குகிறது.

மனிதன் நரகனாக இல்லாமல் தூய மனிதனாக உயரவேண்டுமானால் காமகுரோத மதமாச்சர்யங்களை விடுத்து, நற்பண்புகளை வளர்த்து நல்ல செயல்கள் செய்வதோடு நல்ல விடயங்களில் ஈடுபட வேண்டும் என்ற தத்துவத்தை இந்தத் தீபாவளித் திருநாள் உணர்த்துகிறது.

அசுர குணங்களில் உருவான நரகாசுரனை ஸ்ரீகிருஷ்ண பகவான் சத்யபாமா தேவியுடன் சம்காரம்செய்தநாளேதீபாவளித்திருநாள் ஆகும்.

நரகாசுரனுடன் நடைபெற்ற யுத்தத்தில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா தேர்த்தட்டில் சோர்ந்து விழுந்தபோது சத்யபாமாவாகிய பூமாதேவியானவர் வீரத்துடன் வில்லேந்தி நரகனை வதைத்த தால் தீபாவளித் திருநாள் வீரலஷ்மியை வழிபடும் திருநாளாகவும் போற்றப்படுகின்றது.

**பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக் குரு,**
**பிரதம குரு,**
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்.

ஸ்ரீராமர் அயோத்திக்குத் திரும்பி வந்து பட்டாபிஷேகம் செய்து கொண்ட நாளே தீபாவளித் திருநாளாகக் கொண்டாடப்படுவதாகச் சில நூல்கள் கூறுகின்றன.

பகவான் மகாபலிச்சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்டு இரண்டு அடிகளால் மண்ணுலகினையும் விண்ணுலகினையும் அளந்து மூன்றாவது அடிக்காக, சக்கரவர்த்தியின் தலைமேல் தன் காலடியை வைத்து ஆசீர்வதித்துப் பாதாள உலகினையும் ஆளவைத்தார். மகாபலி ஆண்டுக்கு ஒரு முறை பூமிக்கு வரும்போதுதனக்கு அருள்புரியும் படியும், உலக மக்கள் அனைவரும் அந்த நாளை மகிழ்ச்சிகரமான நன்னாளாகக் கொண்டாட வேண்டும் என்றும் பணிந்து வேண்டினான். மகாபலிக்குத் திருமால் கேட்ட வரம் அருளியபடியே அந்தநாள் தீபாவளி ஆயிற்று என சில நூல்கள் கூறுகின்றன.

சதுர்த்தசி நாளானது சிவராத்திரி எனப்படும் சிவனுக்குரிய விசேட தினமாகும். தனக்கு உகந்த நாளாகிய சதுர்த்தசி நாளில் தான் சிவபெருமான் கங்காதேவியான கங்கையை பூமிக்கு அனுப்பி வைத்தார். இந்தக் கங்கைக்கும் சிவனுக்கும் நன்றி செலுத்தும் நாளாகவும் தீபாவளித்திருநாள் அமைந்துள்ளது.

தீபாவளிஎன்பதுதீபங்கள்வரிசையாகஅடுக்கி வைப்பது மாத்திரமல்ல, அஞ்ஞான இருளில் இருந்து விலகும் தன்மைக்கும் தீபாவளி என்பது பொருத்தமாகிறது.

அறியாமை, விட்டுக்கொடுக்கின்ற மனப்பான்மை இல்லாமை, பெருந்தன்மை இல்லாமை, கல்விஇல்லாமை இப்படியான தன்மைகளை அகற்றும் நாளாகக் கொள்ளத் தக்கதே தீபாவளித் திருநாளாகும்.

வசதிபடைத்தவர்கள் அன்றைய தினம் ஏழை, எளியவர்களுக்கு இனிப்புப் பண்டங்களையும், புத்தாடைகளையும்வழங்கி அவர்களை மகிழ்விக்கும் வகையில் கொண்டாடப்படும் நாளே தீபாவளித்திருநாளாகும்.

திருமால் பத்து அவதாரங்களை எடுத்துப் பக்தர்களைக் காப்பாற்றினார். கிருஷ்ணவதாரத்தில்தான் பல நூற்றுக்கணக்கான கொடிய அசுரர்களையும் அசுரத்தன்மை வாய்ந்தவர்களையும் கொன்றொழித்தார்.

வராகாவதாரம் எடுத்தபோது அவரது உஷ்ணத்தை உலகோரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. பூமாதேவியானவர் வராக நாராயணனைச் சேர்ந்து அந்த வெப்பத்தைத் தணிய வைத்தார். அப்போது தோன்றியவன்தான் நரகன் என்னும் பெயருடைய அரக்கன். மனித வடிவில் அசுரகுணம் கொண்டவன் நரகாசுரன். அசுரர்கள் பிறந்த உடனேயே வளர்ந்து விடுவார்கள்.

இதையுணர்ந்த திருமால் அப்போதே அவனை அழித்துவிடத் தீர்மானித்தார். ஆனால், பூமாதேவியானவர் திருமாலைத் தடுத்து இவனை ''இப்போது கொல்ல வேண்டாம், இவன் பூலோக மாந்தர்களுக்கு தீமை செய்ய முயன்றால் நானே இவனைக் கொன்றுவிடுகிறேன்'' என்று கூறி வைத்தார்.

துவாபரயுகம் தொடங்கிய வேளையிலேயே ஸ்ரீகிருஷ்ணாவதாரமும் நடந்தது. நரகாசுரனின் தொல்லைகள் நாளுக்குநாள் அதிகரித்து வந்தன. தேவர்களும் மானுடர்களும் சொல்லொணாத் துயரடைந்து கிருஷ்ண பரமாத்மாவிடம் சென்று முறையிட்டனர்.

கிருஷ்ண பரமாத்மா பூமாதேவியையும் உடன் அழைத்துக் கொண்டு கருடன் மீதேறிப் புறப்பட்டு நரகாசுரனைப் போருக்கழைத்தார். அப்போரில் நரகாசுரனின் படைகளை அழித்தொழித்த மாயவனால் நரகாசுரனைக் கொல்ல முடியவில்லை. இதனை அவதானித்த சத்யபாமாவாகிய பூமாதேவியானவர், தானே வில்லேந்தி ஒரே ஒரு பாணத்தால் நரகாசுரனின் தலையைச் சீவிக் கொன்றார்.

உயிர்பிரியும் வேளையில் நரகாசுரனுக்கு நல்லறிவு உண்டாகியது. தன்னைக் கொல்ல வந்தவர்கள் திருமாலும், தனது தாயாருமாகிய பூமா தேவியும்தான் என்பதனை நரகாசுரன் உணர்ந்து, தான் உலகோர்க்கும் தேவர்களுக்கும் செய்த கொடுமைகளை நினைந்து வருந்தினான்.

அவனது உயிரானது ஒரு ஒளிவடிமாகத் தோன்றிப் பகவானையும் தேவியையும் மூன்றுமுறை வலம் வந்து ஆகாய மார்க்கமாக மேலெழுந்து சென்று மறைந்தது.

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவை நரகாசுரனின் மகனான பகதத்தன் என்பவன் வந்து பணிந்து நின்றான். ''தந்தையின் தவறுகளை மன்னித்து அவரது ஆவியை ஆசீர்வதிக்கும்படி'' வேண்டிக் கொண்டான்.


பகவானும் பகதத்தன் கோரியவாறே ஆசீர்வதித்து, இன்றுமுதல் இந்நாளை பூலோக மாந்தர் அனைவரும் தீபாவளித் திருநாளாகக் கொண்டாடுவார்களாக என்று அருள் புரிந்து, பூமாதேவியுடன் துவாரகைக்கு மீண்டார்.

நரகாசுரனது உயிர்பிரியும் வேளையில் ஒளி வடிவமாக அவனது ஆவி பகவானைச்சுற்றி மேலெழுந்து சென்றமையால் இத் தினத்திற்கு தீபங்கள் ஏற்றி இறைவனை வழிபடுவது வழக்கமாகியது.

மனிதன் மனிதனாக வாழவேண்டும், மனிதாபிமான உணர்வுதான் சமயம். இந்த உணர்வுதான் பண்பாடுமாகும். எல்லோரும் வாழவேண்டும் எல்லோரும் நல்ல வாழ்வுடன் வளமுடன் இருக்கவேண்டும் என்று இந்தத் தீபாவளித் திருநாளில் வாழ்த்தி பகவானை வணங்கிப் பணிவோம். ★

## புனித நாள்களைக் கொண்டாடுவதால் என்ன பயன்?

இந்நாள்களில் நமது இதயம் புனிதமடைகிறதா? இல்லையே. உலகியல் முறைகளில்தான் இந்த நாள்களைக் கொண்டாடுகின்றோம். இறைவனை நினைவுகொள்ளத்தான் இந்த புனிதநாள்கள் ஏற்பட்டனவே தவிர, பாயாச பரமானங்களைச் சுவைப்பதற்காக அல்ல. புனிதநாள்களை நாம் விருந்து உண்பதிலும், பொழுதுபோக்குவதிலும்தான் செலவழிக்கின்றோம். புனிதநாள்களின் இரகசியத்தைப் புரிந்து கொள்ள நாம் முயற்சி செய்யவேண்டும்.



விழா நாள்களிலும் சரி, மங்கள நாள்களிலும் சரி, என்ன நடந்தாலும் மனித இதயத்தில் மட்டும் சிறிதும் மாற்றம் ஏற்படுவதில்லை. வெளியில் மனிதன் காணப்படும் விதத்துக்கும் தனக்கு உள்ளிருக்கும் ஆத்மாவுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அறிவதில்லை. மனிதனுக்கும் சமூகத்துக்கும் இடையே உள்ள உறவு நமக்குப் புலப்படுவதில்லை. அது நெருக்கமானது. அத்தகைய புனித உறவை மறந்து நாம் அதனால் அவ்வுறவை இழக்கின்றோம். அந்தர்முக பாவத்தை உணர முயற்சி செய்யும்போது ஏகத்துவ பாவனையை நாம் உணர்கின்றோம். இவ்வாறு செய்யாது புனித நாள்களையும் விழாக்களையும் கொண்டாடினால் அவை உலகியல் தொடர்பு கொண்டவையாக மட்டுமே இருக்கும்.

**சாயி சிந்தனை**

தேசத்தின் முதல்தர வங்கியான இலங்கை வங்கி அதன் வருடாந்த அறிக்கைக்கான உலகின் கௌரவமிக்க விருதினை வென்றெடுத்துள்ளது.

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

அன்பர்கள்; நண்பர்கள்; வாடிக்கையாளர்களுக்கு
இலங்கை வங்கியின்தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

- இலங்கைவங்கி அதன் 2006 ஆம் ஆண்டு அறிக்கைக்கான உலகின் கௌரவமிக்க விருதுகளில்நான்கினை வென்றெடுத்துள்ளது.
- ''வருடாந்த அறிக்கைக்கான அக்கடமி விருதுகள்'' தொடர்பில் 2006 ஆம் வருடத்திற்கான வருடாந்த சர்வதேச விருதுகள் போட்டியில் 26 நாடுகளிலிருந்து கலந்துகொண்ட 1900 நிறுவனங்களுடன் இலங்கை வங்கியும் போட்டியிட்டது.
- இதில் 'வங்கிகள்-தேசிய வர்த்தகம்' என்பதன் கீழ் மரபுவழியல்லாத வருடாந்த அறிக்கைப்பிரிவில் மிக உயர்ந்த **தங்க விருதை** இலங்கை வங்கி தட்டிக்கொண்டது.
- இதன் முழுவிவரம் www.mercommawards.com இல் பெற்றுக்கொள்ளலாம்.
- 2006 LACP வருடாந்த சர்வதேச தரிசனம் (VISION ) விருதுகளில் இலங்கைவங்கி 21 நாடுகளிலிருந்து வந்த 2, 500 நிறுவனங்களுடன் போட்டியில் கலந்து கொண்டது.
- இதில் வருடம் 1 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் உள்ள வர்த்தக- வங்கிகள் பிரிவில் மிக உயர்ந்த **பிளாட்டினம் (Platinum )** விருதை வென்றெடுத்துள்ளது.
- சகல பிரிவுகளுக்குமான போட்டியில் இலங்கைவங்கி நிதித்துறையில் சிறந்த அறிக்கைக்கான வெண்கல விருதினை வென்றது.
- மற்றும் 2006 ஆம் ஆண்டுக்கான சிறந்த 100 அறிக்கைகள் போட்டியில் 37 ஆவது இடத்தைப்பெற்றது.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இலங்கை வங்கியின் கிளைகள் யாவும் இன்று காலை 8.30 மணி முதல் 12.00 மணிவரை வாடிக்கையாளர் சேவைகளுக்காகத் திறந்திருக்கும்.